# இடர் களையும் திருப்பதிகங்கள்



தொகுப்பாசிரியர் :

செந்தமிழ்வாரிதி, சிவஞானக்கலாநிதி, கலைமாமணி

பேராசிரியர். முனைவர்.

## இரா. செல்வக்கணபதி

www.saivamonline.com

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# இடர் களையும் திருப்பதிகங்கள்

தொகுப்பாசிரியர்
செந்தமிழ்வாரிதி, சிவஞானக் கலாநிதி
கலைமாமணி
பேராசிரியர். முனைவர். இரா. செல்வக்கணபதி

வெளியீடு
தெய்வச் சேக்கிழார் மனிதவள மேம்பாட்டு அறக்கட்டளை
சென்னை - 600 090. தமிழ்நாடு, இந்தியா

www.saivamonline.com

## நூலைப் பற்றி...
## (BIBILIOGRAPHICAL DATA)

நூல் பெயர் : இடர் களையும் திருப்பதிகங்கள்

ஆசிரியர் : முனைவர். இரா. செல்வக்கணபதி

பொருள் : இலக்கியம்

பதிப்பு : முதற் பதிப்பு 2002, இரண்டாம் பதிப்பு 2003, மூன்றாம் பதிப்பு 2005, நான்காம் பதிப்பு 2009, ஐந்தாம் பதிப்பு 2011, ஆறாம் பதிப்பு 2016

உரிமை : ஆசிரியருக்கே

தாள் : மேப் லித்தோ

எழுத்து : 10 புள்ளிகள்

நூல் அளவு : கிரவுன்

பக்கம் : 128

விலை : ரூ.100.00

வெளியீடு: தெய்வச் சேக்கிழார் மனிதவள மேம்பாட்டுஅறக்கட்டளை, சென்னை 600 090, தமிழ்நாடு, இந்தியா.

தொடர்புக்கு: எச்.15/2, கரிகாலன் தெரு, கலாசேத்திரா காலனி, பெசன்ட் நகர், சென்னை 600 090.
தொலைபேசி : 0091 44 24916888
செல் : 94440 21113
E-mail : nayanmar_63@yahoo.co.in

web : www.nayanmar.com, www.saivam.co.in

அச்சிட்டோர் : லவ்லி ஆப்செட் பிரிண்டர்ஸ் பிரைவேட் லிமிடெட்,
சிவகாசி.
போன் : 04562-221141

www.saivamonline.com

## ஐந்தாம் பதிப்பின் முன்னுரை

உலகின் தொன்மையான சமயங்களுள் ஒன்று சைவ சமயம். இது காலப் பழமையும், சாலப் பெருமையும் கொண்டது. சிவ பெருமானை முழுமுதற்கடவுளாகக் கொண்டது சைவம். இந்தியத் திருநாட்டில் சைவம் பெரிதும் சிறந்துள்ளது. தமிழ்நாட்டில் கி.பி. ஏழாம் நூற்றாண்டுக்குப் பின்னர் சைவ சமயம் மாபெரும் வளர்ச்சி பெற்றது.

திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி சுவாமிகள் தலங்கள் தோறும் சென்று தேவாரப் பனுவல்களை அருளிச் செய்தனர். புறச் சமயங்கள் தலை சாய்ந்தன. மாணிக்கவாசகர் திருவாசகம் அருளிச் செய்தார். நால்வர் பெருமக்கள் வாழ்வில் சிவனருளால் அருள் அற்புதங்கள் பல நிகழ்ந்தன. இவை மக்களைச் சைவத்தின்பால் ஈடுபாடு கொள்ள வைத்தன. சிவனருள் நம்மை வாழவைக்கும் என்ற நம்பிக்கையை இவை தோற்றுவித்தன.

படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்பன சிவபெருமான் நிகழ்த்தும் சிறப்பான ஐந்தொழில்கள் என்பர். இவை யாவும் நால்வர் பெருமக்கள் வாழ்வில் நிகழ்ந்தன. அவர்கள் அன்பும், அருளும் சிவனருளோடு இணைந்து வெளிப் பட்டன. இறந்தவர் பிழைத்தெழுந்தனர். நோயுற்றோர் நலம் பெற்றனர். வறிஞர் செல்வராயினர். தடையுற்ற திருமணங்கள் நிகழ்ந்தேறின. ஊமைகள் பேசினர். பார்வை இழந்தோர் கண் ஒளி பெற்றனர். விதிவழி, இல்லை என்று கூறப்பட்டவர்களுக்கும் மகப்பேறுகள் வாய்த்தன. இத்தகு நூற்றுக்கணக்கான அற்புத நிகழ்வுகளைப் பெரியபுராணம் விரித்துப் பேசியது.

www.saivamonline.com

நம்பிக்கையே வாழ்வு என்றனர் முன்னோர். நால்வர் அருள் வரலாற்று அருள் அற்புதங்கள் நிகழ்ந்த சிவாலயங்களும், சிவத் தலங்களும் மக்களுக்கு நம்பிக்கை ஊட்டின. அருள் அற்புதங்கள் நிகழ்ந்த காலை அருளிச் செய்யப் பெற்ற பதிகப்பாமாலைகள் மக்களைச் சிந்திக்க வைத்தன. நாமும், அத்தகு சிறப்புமிக்க பதிகப் பாமாலைகளை நெஞ்சுருக ஓதினால் நமக்கும் சிவனருள் கிட்டும் என்ற நம்பிக்கை சைவர்கள்பால் அரும்பத் தொடங்கியது. கடந்த ஆயிரத்துநூறு ஆண்டுகளில் இந்த அளப்பரிய நம்பிக்கை பல்லாயிரவர்க்கு வாழ்வு தந்தது. சிவாலயங்கள் ஒளி பூத்தன. பதிகப் பாமாலைகள் நம்பிக்கையூட்டும் நன்மருந்துகளாக உணரப்பட்டன.

ஆவடுதுறை அரன் பொன் தருவான்; திருவெண்காடு சென்று வழிபட்டால் பிள்ளைப்பேறு வாய்க்கும்; கச்சி ஏகம்பன் கண்ணொளி தருவான்; நெடுங்களம் சென்றால் துன்பம் நீங்கும்; திருக்கருகாவூர் வழிபாடு கருக்காத்து உய்க்கும். சிராப்பள்ளிக் குன்றுடையான் தாயெனத் துணை நிற்பான்; ‘ஒன்று கொலாம்’ பதிகம் பணிவிடம் பாற்றும்; திருச்சாழல் பாராயணம் சொல்வன்மை தரும். ‘வேயுறு தோளி’ என்றால் நவகோள்களும் நட்புச் செய்யும் என்றெல்லாம் சைவத் தமிழ் மக்கள் குருதிகளில் கலந்துவிட்ட அளப்பரிய நம்பிக்கையே இங்கே நாத்திக வாதங்கள் தலைசாயக் காரணமாயிற்று.

யார் யார், எந்த எந்த ஊரில், எந்த எந்தப் பதிகங்களை நம்பிக்கையோடு ஓதி நலம் பெற்றனர் என்று பட்டியல் இடுவது கடினமான ஒன்றன்று.

அது தேவையற்றது என்பதே உண்மை.

சிவனருள் வெள்ளத்திற்கு நாம் யார் சாற்றுக்கவிகள் தர?

அவன் அருள் வெள்ளம், நெல்லுக்கும் பாயும்; புல்லுக்கும் பாயும்.

வேண்டி நிற்பார்க்கு அருள் சற்றுக் கூடுதலாகக் கிடைக்கும்.

தேவாரத் திருமுறைகளில் எல்லாப் பதிகங்களுமே அருள் நிறைந்தன; அல்லல் அறுப்பன; அமைதி தருவன.

www.saivamonline.com

ஓடும் பேராற்றில் இறங்கி நீராடத் துறை அமைப்பது போல், சிவனருள் கருணைப் பெருவெள்ளத்தில் சில துளிகளை ஒன்று திரட்டி, **'இடர் களையும் திருப்பதிகங்கள்'** என்ற சிறுநூல் ஒன்றை வெளிக்கொணரச் சிவனருள் என்னைப் பணி கொண்டது.

சைவ சித்தாந்தம் பெரிதெடுத்துப் பேசும் தத்துவங்கள் முப்பத்தாறு. அதே எண்ணிக்கையில் பதிகங்கள் தொகுக்கப் பெற்றன. பதிகப் பலன் - சிறப்பான குறிப்புக்கள் - பதிக ஆசிரியர் - பண் - தற்காலத்துப் பாடப்பட்டு வரும் இராகம் - பதிகம் தோன்றிய தலம் என்பன பதிகத் தொடக்கத்தில் திரட்டித் தரப் பெற்றுள்ளன.

தூய நீராடி, திருநீறு புனைந்து, சிவனை நினைந்து வழிபட்டு, சிறிது தியானம் செய்து, பின்னர் விரும்பும் பதிகத்தை சுத்தாங்கமாகவோ, இசையுடனோ ஓத வேண்டும்.

உரக்கப் படிக்க இயலாவிடின், மனத்துள்ளும் பாராயணம் செய்யலாம்.

நேரம் வாய்க்குமாறு, ஒரு முறை, இருமுறை, மும்முறை ஓதலாம்.

காலை - மாலை ஓதுவது பெருஞ்சிறப்பு.

நம்பிக்கையே அடித்தளம். நம்பிக்கையோடு பாராயணம் செய்யுங்கள். இடர்நீங்கும், இன்பம் பெருகும், சிவனருள் தோன்றாத் துணையாகி நலம் பயக்கும்.

இத்தொகுப்பு வெளிவர என்னை ஊக்கம் ஊட்டி நெறிப்படுத்திய லண்டன் ஸ்ரீ முருகன் ஆலயத் தலைமைச் சிவாசாரியார் கயிலை சிவஸ்ரீ. இராம. நாகநாதசிவம் அவர்களுக்கு என் பணிவும் வணக்கமும் உரியன.

நம்பினார் கெடுவதில்லை!
இது நால்வர் அருள்வாக்கு!

அன்பன்
**இரா. செல்வக்கணபதி**

**www.saivamonline.com**



**முனைவர். இரா. செல்வக்கணபதி**
**(1939-2016)**

www.saivamonline.com

## பொருளடக்கம்

1. தில்லைச்சிற்றம்பலவன் திருவருள் பெற...
2. இம்மை மறுமை இன்பம் பெற...
3. திருமணம் விரைவில் கூடிவர...
4. விரும்பிய மணவாழ்வு அமைய...
5. இணைபிரியாத இல்லறம் சிறக்க...
6. உறுதியாகப் பிள்ளைப்பேறு வாய்க்க...
7. கருச்சிதையாது குழந்தைப் பிறக்க...
8. குடும்ப உறுப்பினர் கொடுமையிலிருந்து விடுபட...
9. செல்வ வளம் பெருக...
10. உணவும் - உடையும் என்றும் அமைய...
11. வாக்கு வன்மை பெற...
12. நல்லோர் உறவு கைகூட...
13. நம்பிக்கை வெற்றிபெற...
14. அல்லல்கள் அகல...
15. துயரங்கள் தவிடுபொடியாக...
16. துன்பமற்ற இன்பவாழ்வு அமைய...
17. உடல் உறுப்புகள் உறுதிபெற...
18. மறுமை, இம்மை வினை அகல...
19. திருவருள் குற்றத்திலிருந்து விடுபட...
20. கொடும் சுரநோய்கள் அகல...
21. பில்லி, சூனியம், ஏவல் செயல் இழக்க...
22. கைவிடப்பட்ட நிலையில் வாழ்வு பெற...

www.saivamonline.com

23. கண்கள் ஒளிபெற்றுப் பார்வை சிறக்க...

24. நவக்கிரக தோஷம் நீங்க...

25. சனீஸ்வரன் அருள் பெற...

26. வஞ்சகர் வலையிலிருந்து விடுபட...

27. பகைவர்கள் தண்டனை பெற...

28. முதலுக்கு ஏற்ற லாபம், உழைப்புக்கு ஏற்ற ஊதியம் கிடைக்க...

29. தடைகளைத் தகர்த்து முன்னேற...

30. ஈட்டிய செல்வம் என்றும் நமக்கு உதவ...

31. இனம்புரியாத அச்சத்திலிருந்து விடுபட...

32. தனிமைத் துயரிலிருந்து விடுபட்டுத் துணையுடன் கூட...

33. நீண்ட ஆயுள் பெற்று நீடு இனிது வாழ...

34. அகாலமரணம் ஏற்படாது வாழ்வுபெற...

35. முதுமை வாழ்வு அமைதியாக நடையிட...

36. மேன்மை கொள் சைவ நீதி தழைத்திட...

www.saivamonline.com

## 1. தில்லைத் திருச்சிற்றம்பலவன் திருவருள் பெற்று, என்றும் இன்பம் பெருக, செல்வ வாழ்வு வாழ ஓத வேண்டிய பதிகம்

ஆசிரியர் : திருஞானசம்பந்தர்
பண் : குறிஞ்சி
இராகம் : அரிகாம்போதி
தலம் : கோயில் (சிதம்பரம்)

திருச்சிற்றம்பலம்

கற்றாங்கு எரியோம்பிக் கலியை வாராமே
செற்றார் வாழ்தில்லைச் சிற்றம் பலம்மேய
முற்றா வெண்திங்கள் முதல்வன் பாதமே
பற்றா நின்றாரைப் பற்றா பாவமே. 1

பறப்பைப் படுத்துஎங்கும்பசு வேட்டு எரிஒம்புஞ்
சிறப்பர் வாழ்தில்லைச் சிற்றம் பலமேய
பிறப்பில் பெருமானைப் பின் தாழ் சடையானை
மறப்பி லார்கண்டீர் மையல் தீர்வாரே. 2

மையார் ஒண்கண்ணார் மாட நெடுவீதிக்
கையால் பந்துஓச்சுங் கழிசூழ் தில்லையுள்
பொய்யா மறைபாடல் புரிந்தான் உலகேத்தச்
செய்யான் உறைகோயில் சிற்றம் பலந்தானே. 3

நிறைவெண் கொடிமாட நெற்றி நேர் தீண்டப்
பிறைவந்திறைதாக்கும் பேரம் பலம் தில்லைச்
சிறைவண்டு அறையோவாச் சிற்றம் பலமேய
இறைவன் கழலேத்தும் இன்பம் இன்பமே. 4

www.saivamonline.com

செல்வ நெடுமாடம் சென்று சேணோங்கிச்
செல்வ மதிதோயச் செல்வம் உயர்கின்ற
செல்வர் வாழ்தில்லைச் சிற்றம் பலமேய
செல்வன் கழலேத்தும் செல்வம் செல்வமே. 5

வருமாந் தளிர்மேனி மாதோர் பாகமாந்
திருமாந் தில்லையுட் சிற்றம் பலமேய
கருமான் உரியாடைக் கறைசேர் கண்டத்தெம்
பெருமான் கழலல்லாற் பேணா துள்ளமே. 6

அலையார் புனல்சூடி ஆகத் தொருபாகம்
மலையான் மகளோடு மகிழ்ந்தான் உலகேத்தச்
சிலையால் எயிலெய்தான் சிற்றம் பலந்தன்னைத்
தலையால் வணங்குவார் தலையா னார்களே. 7

கூர்வாள் அரக்கன்தன் வலியைக் குறைவித்துச்
சீரா லேமல்கு சிற்றம் பலமேய
நீரார் சடையானை நித்தல் ஏத்துவார்
தீரா நோயெல்லாந் தீர்தல் திண்ணமே. 8

கோணா கணையானுங் குளிர்தா மரையானும்
காணார் கழல் ஏத்தக் கனலாய் ஓங்கினான்
சேணார் வாழ்தில்லைச் சிற்றம் பலமேத்த
மாணா நோயெல்லாம் வாளா மாயுமே. 9

பட்டைத் துவராடைப் படிமம் கொண்டாடும்
முட்டைக் கட்டுரை மொழிவ கேளாதே
சிட்டர் வாழ்தில்லைச் சிற்றம் பலமேய
நட்டப் பெருமானை நாளுந் தொழுவோமே. 10

ஞாலத் துயர்காழி ஞான சம்பந்தன்
சீலத் தார்கொள்கைச் சிற்றம் பலமேய
சூலப் படையானைச் சொன்ன தமிழ்மாலை
கோலத் தாற்பாட வல்லார் நல்லாரே. 11

திருச்சிற்றம்பலம்

www.saivamonline.com

## 2. இம்மை, மறுமையில் பரிபூரணமான இன்பம் பெற்று வாழ ஓதவேண்டிய பதிகம்

இப்பதிகம் : 1. எமபயம் போக்கும், 2. இடர் கெடுக்கும், 3. அல்லல் அறுக்கும், 4. மறுமையிலும் துணையாகும், 5. வினை நீக்கும், 6. தேவர் உலகில் சேர்க்கும்

ஆசிரியர் : திருஞானசம்பந்தர்
பண் : காந்தாரபஞ்சமம்
இராகம் : கேதாரகௌளை
தலம் : பஞ்சாக்கரப்பதிகம் (சீகாழி)

திருச்சிற்றம்பலம்

துஞ்சலும் துஞ்சல் இல்லாத போழ்தினும்
நெஞ்சகம் நைந்து நினைமின், நாள்தொறும்;
வஞ்சகம் அற்று அடி வாழ்த்த, வந்த கூற்று
அஞ்ச உதைத்தன, அஞ்சு எழுத்துமே. 1

மந்திரம் நான்மறை ஆகி, வானவர்
சிந்தையுள் நின்று, அவர்தம்மை ஆள்வன;
செந்தழல் ஓம்பிய செம்மை வேதியர்க்கு
அந்தியுள் மந்திரம் அஞ்சு எழுத்துமே. 2

ஊனில் உயிர்ப்பை ஒடுக்கி, ஒண்சுடர்
ஞான விளக்கினை ஏற்றி, நன்புலத்து
ஏனை வழிதிறந்து ஏத்துவார்க்கு, இடர்
ஆன கெடுப்பன, அஞ்சு எழுத்துமே. 3

நல்லவர் தீயர் எனாது, நச்சினர்
செல்லல் கெடச் சிவமுத்தி காட்டுவ;
கொல்ல நமன்தமர் கொண்டு போம் இடத்து
அல்லல் கெடுப்பன, அஞ்சு எழுத்துமே. 4

www.saivamonline.com

கொங்குஅலர் வன்மதன் வாளிஐந்து; அகத்து
அங்குள பூதமும் அஞ்ச; ஐம் பொழில்
தங்கு அரவின் படம் அஞ்சும்; தம் உமை
அங்கையில் ஐவிரல்; அஞ்சு எழுத்துமே. 5

தும்மல் இருமல் தொடர்ந்த போழ்தினும்,
வெம்மை நரகம் விளைந்த போழ்தினும்,
இம்மைவினை அடர்த்து எய்தும் போழ்தினும்
அம்மையினும் துணை அஞ்சு எழுத்துமே. 6

வீடு பிறப்பை அறுத்து மெச்சினர்;
பீடை கெடுப்பன; பின்னை நாள்தொறும்
மாடு கொடுப்பன; மன்னு மாநடம்
ஆடி உகப்பன, அஞ்சு எழுத்துமே. 7

வண்டுஅமர் ஓதி மடந்தை பேணின,
பண்டை இராவணன் பாடி உய்ந்தன;
தொண்டர்கள் கொண்டு துதித்தபின், அவர்க்கு
அண்டம் அளிப்பன அஞ்சு எழுத்துமே. 8

கார்வணன், நான்முகன், காணுதற்கு ஒணாச்
சீர்வணச் சேவடி செவ்வி, நாள்தொறும்
பேர்வணம் பேசிப் பிதற்றும் பித்தர்கட்கு
ஆர்வணம் ஆவன, அஞ்சு எழுத்துமே. 9

புத்தர், சமண் கழுக்கையர், பொய்கொளாச்
சித்தத் தவர்கள் தெளிந்து தேறின
வித்தகநீறு அணிவார் வினைப் பகைக்கு
அத்திரம் ஆவன அஞ்சு எழுத்துமே. 10

நற்றமிழ் ஞானசம் பந்தன், நால்மறை
கற்றவன் காழியர் மன்னன் உன்னிய
அற்றம்இல் மாலை ஈர்ஐந்தும் அஞ்சுஎழுத்து
உற்றன வல்லவர் உம்பர் ஆவரே. 11

திருச்சிற்றம்பலம்

www.saivamonline.com

## 3. பல்வேறு காரணங்களால் திருமணம் தடைப்படும் ஆணும் பெண்ணும் திருமணஞ்சேரி சென்று மணக்கோலத்தில் காட்சி தரும் இறைவனை வழிபட்டு, நியமத்துடன் இப்பதிகத்தைப் பாராயணம் செய்தால் திருமணம் விரைவில் கூடிவரும்.

ஆசிரியர் : திருஞானசம்பந்தர்
பண் : இந்தளம்
இராகம் : மாயா மாளவ கௌளை
தலம் : திருமணஞ்சேரி

திருச்சிற்றம்பலம்

அயில் ஆரும் அம்பு அதனால் புரம் மூன்று எய்து
குயில் ஆரும் மென்மொழியாள் ஒருகூறு ஆகி
மயில் ஆரும் மல்கிய சோலை மணஞ்சேரிப்
பயில்வானைப் பற்றி நின்றார்க்கு இல்லை, பாவமே. 1

விதியானை விண்ணவர்தாம் தொழுது ஏத்திய
நெதியானை நீள் சடைமேல் நிகழ்வித்த வான்
மதியானை வண் பொழில் சூழ்ந்த மணஞ்சேரிப்
பதியானைப் பாட வல்லார் வினை பாறுமே. 2

எய்ப்பு ஆனார்க்கு இன்புறு தேன் அளித்து ஊறிய
இப்பால் ஆய் எனையும் ஆள உரியானை
வைப்பான மாடங்கள் சூழ்ந்த மணஞ்சேரி
மெய்ப்பானை மேவிநின்றார் வினை வீடுமே. 3

விடையானை மேல் உலகு ஏழும்இப்பார் எல்லாம்
உடையானை ஊழி தோறுஊழி உளதுஆய
படையானை பண்இசை பாடு மணஞ்சேரி
அடைவானை அடைய வல்லார்க்கு இல்லை அல்லலே. 4

எறி ஆர் பூங்கொன்றையினோடும் இளமத்தம்
வெறி ஆரும் செஞ்சடை ஆர மிலைத்தானை
மறி ஆரும் கை உடையானை மணஞ்சேரிச்
செறிவானைச் செப்ப வல்லார்க்கு இடர் சேராவே. 5

மொழியானை முன்ஒரு நால்மறை ஆறுஅங்கம்
பழியாமைப் பண்இசை ஆன பகர்வானை
வழியானை வானவர் ஏத்தும் மணஞ்சேரி
இழியாமை ஏத்த வல்லார்க்கு எய்தும் இன்பமே. 6

எண்ணானை எண் அமர்சீர் இமையோர்கட்குக்
கண்ணானை, கண் ஒரு மூன்றும் உடையானை
மண்ணானை மாவயல் சூழ்ந்த மணஞ்சேரிப்
பெண்ணானைப் பேச நின்றார் பெரியோர்களே. 7

எடுத்தானை எழில் முடி எட்டும் இரண்டும் தோள்
கெடுத்தானை, கேடு இலாச் செம்மை உடையானை
மடுத்தார வண்டு இசைபாடும் மணஞ்சேரி
பிடித்து ஆரப் பேண வல்லார், பெரியோர்களே. 8

சொல்லானைத் தோற்றம் கண்டானும் நெடுமாலும்
கல்லானைக் கற்றன சொல்லித் தொழுது ஓங்க
வல்லார், நல் மாதவர் ஏத்தும் மணஞ்சேரி
எல்லாம் ஆம் எம்பெருமான், கழல் ஏத்துமே. 9

சற்றேயும் தாம் அறிவுஇல் சமண் சாக்கியர்
சொற்றேயும் வண்ணம் ஓர் செம்மை உடையானை
வற்றாத வாவிகள் சூழ்ந்த மணஞ்சேரி
பற்றாக வாழ்பவர்மேல் வினை பற்றாவே. 10

கண் ஆரும் காழியர்கோன் கருத்து ஆர்வித்த
தண் ஆர் சீர் ஞானசம்பந்தன் தமிழ்மாலை
மண் ஆரும் மாவயல் சூழ்ந்த மணஞ்சேரி
பண்ஆரப் பாடவல்லார்க்கு இல்லை, பாவமே. 11

திருச்சிற்றம்பலம்

www.saivamonline.com

## 4. விரும்பிய காதலர்கள் திருமணம் செய்துகொள்ளத் தடை ஏற்படும் போதும், இராகு கேதுக்களால் திருமணம் தள்ளிப்போகும் போதும் ஓத வேண்டிய பதிகம்

திருமருகலில் பாம்பு தீண்டி இறந்த காதலனை இப்பதிகம் பாடி உயிர்ப்பித்து அவன் காதலியோடு இணைத்து வைத்த திருஞான சம்பந்தர் பாடியது.

ஆசிரியர் : திருஞானசம்பந்தர்
பண் : இந்தளம்
இராகம் : நாதநாமக்கிரியை
தலம் : திருமருகல்

திருச்சிற்றம்பலம்

சடையாய் எனுமால் சரண்நீ எனுமால்
விடையாய் எனுமால் வெருவா விழுமால்
மடையார் குவளை மலரும் மருகல்
உடையாய் தகுமோ இவள்உள் மெலிவே. 1

சிந்தா எனுமால் சிவனே எனுமால்
முந்தா எனுமால் முதல்வா எனுமால்
கொந்தார் குவளை குலவும் மருகல்
எந்தாய் தகுமோ இவள்ஏ சறவே. 2

அறையார் கழலும் அழல்வாய் அரவும்
பிறையார் சடையும் உடையாய் பெரிய
மறையார் மருகல் மகிழ்வாய் இவளை
இறையார் வளைகொண்டு எழில்வவ் வினையே. 3

www.saivamonline.com

ஒலிநீர் சடையில் கரந்தாய் உலகம்
பலிநீ திரிவாய் பழியில் புகழாய்
மலிநீர் மருகல் மகிழ்வாய் இவளை
மெலிநீர் மையளாக் கவும்வேண் டினையே. 4

துணி நீலவண்ணம் முகில்தோன் றியன்ன
மணிநீ லகண்டம் உடையாய் மருகல்
கணிநீ லவண்டார் குழலாள் இவள்தன்
அணிநீ லவொண்கண் அயர்வாக் கினையே. 5

பலரும் பரவப் படுவாய் சடைமேல்
மலரும் பிறையொன்று உடையாய் மருகல்
புலருந் தனையும் துயிலாள் புடைபோந்து
அலரும் படுமோ அடியா ளிவளே. 6

வழுவாள் பெருமான் கழல்வாழ் கவெனா
எழுவாள் நினைவாள் இரவும் பகலும்
மழுவாள் உடையாய் மருகல் பெருமான்
தொழுவாள் இவளைத் துயராக் கிளையே. 7

இலங்கைக்கு இறைவன் விலங்கல் எடுப்பத்
துலங்கவ் விரலூன் றலுந்தோன் றலனாய்
வலங்கொள் மதிள்சூழ் மருகற் பெருமான்
அலங்கல் இவளை அலராக் கிளையே. 8

எரியார் சடையும் அடியும் இருவர்
தெரியா ததொர்தீத் திரளா யவனே
மரியார் பிரியா மருகற் பெருமான்
அரியாள் இவளை அயர்வாக் கினையே. 9

அறிவில் சமணும் மலர்சாக் கியரும்
நெறியல் லனசெய் தனர்நின்று உழல்வார்
மறியேந் துகையாய் மருகல் பெருமான்
நெறியார் குழலி நிறைநீக் கினையே. 10

www.saivamonline.com

வயஞானம் வல்லார் மருகல் பெருமான்
உயர்ஞா னமுணர்ந்து அடியுள் குதலால்
இயன்ஞா னசம்பந் தனபா டல்வல்லார்
வியன்ஞா லமெல்லாம் விளங்கும் புகழே. 11

திருச்சிற்றம்பலம்

www.saivamonline.com

## 5. பெண்ணும் ஆணும் கூடிவாழும் இல்லறவாழ்வு, நல்லற வாழ்வாக அமையவும், இணைபிரியாது வாழவும் ஓத வேண்டிய பதிகம்

ஆசிரியர் : திருஞானசம்பந்தர்
பண் : கொல்லி
இராகம் : நவரோசு
தலம் : சீகாழியை நினைந்து மதுரையில் பாடியது.

திருச்சிற்றம்பலம்

மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்; வைகலும்
எண்ணில், நல்லகதிக்கு யாதும் ஓர்குறைவு இலை;
கண்ணில், நல்லஃதுஉறும்; கழுமல வளநகர்ப்
பெண்ணில் நல்லாளொடும் பெருந்தகை இருந்ததே. 1

போதையார் பொன்கிண்ணத்து அடிசில் பொல்லாது எனத்
தாதையார் முனிவு உறத் தான் எனை ஆண்டவன்
காதையார் குழையினன்; கழுமல வளநகர்ப்
பேதையாள் அவளொடும் பெருந்தகை இருந்ததே. 2

தொண்டு அணை செய் தொழில், துயர் அறுத்து உய்யலாம்;
வண்டு அணை கொன்றையான், மதுமலர்ச் சடைமுடி;
கண்துணை நெற்றியான்; கழுமல வளநகர்ப்
பெண் துணை ஆக ஓர் பெருந்தகை இருந்ததே. 3

அயர்வு உளோம் என்று நீ அசைவு ஒழி நெஞ்சமே
நியர்வளை முன்கையாள் நேரிழை அவளொடும்
கயல் வயல் குதிகொளும் கழுமல வளநகர்ப்
பெயர்பல துதிசெய, பெருந்தகை இருந்ததே. 4

அடைவு இலோம் என்று நீஅயர்வு ஒழிநெஞ்சமே

www.saivamonline.com

விடைஅமர் கொடியினான்; விண்ணவர் தொழுதுஎழும்
கடைஉயர் மாடம் ஆர் கழுமல வளநகர்ப்,
பெடைநடை அவளொடும் பெருந்தகை இருந்ததே. 5

மற்று ஒரு பற்று இலை, நெஞ்சமே; மறைபல
கற்ற நல் வேதியர் கழுமல வளநகர்ச்
சிற்றிடைப் பேர் அல்குல் திருந்திழை அவளொடும்
பெற்று எனை ஆள்உடைப் பெருந்தகை இருந்ததே. 6

குறை வளைவது மொழி குறைவு ஒழி, நெஞ்சமே
நிறை வளை முன்கையாள் நேரிழை அவளொடும்
கறை வளர் பொழில்அணி கழுமல வள நகர்ப்
பிறை வளர் சடைமுடிப் பெருந்தகை இருந்ததே. 7

அரக்கனார் அருவரை எடுத்தவன் அலறிட
நெருக்கினார் விரலினால்; நீடுயாழ் பாடவே
கருக்கு வாள் அருள் செய்தான்; கழுமல வளநகர்ப்
பெருக்கும் நீர் அவளொடும் பெருந்தகை இருந்ததே. 8

நெடியவன் பிரமனும் நினைப்பு அரிதாய், அவர்
அடியொடு முடி அறியா அழல் உருவினன்;
கடிகமழ் பொழில் அணி கழுமல வளநகர்ப்
பிடிநடை அவளொடும் பெருந்தகை இருந்ததே. 9

தார் உறு தட்டு உடைச் சமணர் சாக்கியர்கள் தம்
ஆர் உறு சொல் களைந்து அடிஇணை அடைந்து உய்ம்மின்
கார் உறு பொழில் வளர் கழுமல வளநகர்ப்
பேர் அறத்தாளொடும் பெருந்தகை இருந்ததே. 10

கருந்தடம் தேன்மல்கு கழுமல வளநகர்ப்
பெருந்தடங் கொங்கையோடு இருந்த எம்பிரான்தனை
அருந்தமிழ் ஞானசம்பந்தன செந்தமிழ்
விரும்புவார் அவர்கள் போய், விண்ணுலகு ஆள்வரே. 11

திருச்சிற்றம்பலம்

www.saivamonline.com

## 6. ஜாதக ரீதியாகவும், மருத்துவ ரீதியாகவும் குழந்தைப்பேறு இல்லை என்று கூறப்பட்டவர்களுக்கும், குழந்தைப்பேறு வாய்க்க நம்பிக்கையுடன் ஓத வேண்டிய பதிகம்

இப்பதிகம் காட்டிய நெறியில் திருவெண்காடு சார்ந்து முக்குள நீராடி பெருமானை வழிபட்ட பெற்றோர்களுக்குச் சைவ சித்தாந்த முதலாசிரியர் மெய்கண்டார் திருமகனாக அவதரித்தார்.

ஆசிரியர் : திருஞானசம்பந்தர்
பண் : சீகாமரம்
இராகம் : மாயா மாளவ கௌளை
தலம் : திருவெண்காடு

திருச்சிற்றம்பலம்

கண் காட்டும் நுதலானும், கனல்
காட்டும் கையானும்,
பெண் காட்டும் உருவானும்
பிறை காட்டும் சடையானும்
பண் காட்டும் இசையானும் பயிர்
காட்டும் புயலானும்
வெண் காட்டில் உறைவானும், விடை
காட்டும் கொடியானே. 1

பேய் அடையா, பிரிவு எய்தும்;
பிள்ளையினோடு உள்ளம் நினைவு
ஆயினவே வரம் பெறுவர்; ஐயுற
வேண்டா ஒன்றும்;
வேயனதோள் உமை பங்கன் வெண்காட்டு
முக்குள நீர்,

தோய்வினையார் அவர் தம்மைத்
    தோயாவாம், தீவினையே. 2

மண்ணொடு நீர், அனல், காலோடு
    ஆகாயம், மதி, இரவி,
எண்ணில் வரும் இயமானன், இக
    பரமும், எண்திசையும்
பெண்ணினொடு ஆண், பெருமையொடு
    சிறுமையும், ஆம் பேராளன்
விண்ணவர்கோன் வழிபட, வெண்காடு
    இடமா விரும்பினனே. 3

விடம் உண்ட மிடற்று அண்ணல்
    வெண்காட்டின் தண்புறவில்
மடல் விண்டமுடத்தாழை மலர் நிழலைக்
    குருகு என்று
தடம் மண்டு துறைக்கெண்டை,
    தாமரையின் பூமறையக்
கடல் விண்ட கதிர் முத்தம் நகை
    காட்டும் காட்சியதே. 4

வேலை மலி தண்கானல் வெண்
    காட்டான் திருவடிக்கீழ்
மாலை மலி வண்சாந்தால் வழிபடு
    நல் மறையவன்தன்
மேல் அடர் வெங்காலன் உயிர் விண்ட
    பினை, நமன் தூதர்,
ஆலமிடற்றான் அடியார் என்று,
    அடர அஞ்சுவரே. 5

தண்மதியும் வெய்யரவும் தாங்கினான்,
    சடையின் உடன்;
ஒண்மதிய நுதல் உமை ஓர்
    கூறுஉகந்தான்; உறைகோயில்
பண்மொழியால் அவன் நாமம் பல
    ஓதப், பசுங்கிள்ளை

www.saivamonline.com

வெண்முகில் சேர் கரும்பெணை மேல்
வீற்றிருக்கும் வெண்காடே. 6

சக்கரம் மாற்கு ஈந்தானும்,
சலந்தரனைப் பிளந்தானும்,
அக்கு அரைமேல் அசைத்தானும்
அடைந்துஅயிரா வதம்பணிய
மிக்கு அதனுக்கு அருள் சுரக்கும்
வெண்காடும் வினைதுரக்கும்
முக்குளம் நன்கு உடையானும்,
முக்கண்உடை இறையவனே. 7

பண்மொய்த்த இன்மொழியாள்,
பயம்எய்த மலைஎடுத்த
உன்மத்தன் உரம் நெரித்து, அன்று
அருள்செய்தான் உறைகோயில்,
கண்மொய்த்த கரு மஞ்ஞை
நடம்ஆட, கடல் முழங்க
விண்மொய்த்த பொழில் வரிவண்டு
இசைமுரலும் வெண்காடே. 8

கள் ஆர் செங் கமலத்தான்
கடல்கிடந்தான், எனஇவர்கள்
ஒள் ஆண்மை கொளற்கு ஓடி,
உயர்ந்து ஆழ்ந்தும், உணர்வு அரியான்;
வெள் ஆனை தவம் செய்யும் மேதகு வெண்
காட்டான் என்று
உள் ஆடி உருகாதார்
உணர்வு உடைமை, உணரோமே. 9

போதியர்கள் பிண்டியர்கள் மிண்டு
மொழி பொருள் என்னும்
பேதையர்கள் அவர்; பிரிமின்;
அறிவுடையீர், இதுகேள்மின்;
வேதியர்கள் விரும்பியசீர்

www.saivamonline.com

வியன் திருவெண்காட்டான் என்று
ஓதியவர் யாதும் ஒரு தீது இலர்
என்று உணருமினே. 10

தண் பொழில் சூழ் சண்பையர் கோன்,
தமிழ்ஞான சம்பந்தன்,
விண் பொழி வெண் பிறைச் சென்னி
விகிர்தன்உறை வெண்காட்டைப்,
பண் பொலி செந் தமிழ் மாலை
பாடியபத்து இவை வல்லார்,
மண் பொலிய வாழ்ந்தவர், போய்
வான்பொலியப் புகுவாரே. 11

திருச்சிற்றம்பலம்

www.saivamonline.com

## 7. கருவுற்ற பெண்ணின் கருச்சிதையாது பிள்ளைப்பேறு வாய்க்கவும், விரும்பியவாறு ஆண் அல்லது பெண் குழந்தை வாய்க்கவும் பெண்கள் நம்பிக்கையுடன் ஓத வேண்டிய பதிகம்

திருக்கருகாவூர் இறைவி : கற்பரட்சாம்பிகை. பல்லாயிரவர் இத்தலத்தை வழிபட்ட நன்மக்கள் பேறு பெற்றுள்ளனர்.

ஆசிரியர் : திருநாவுக்கரசர்
தலம் : திருக்கருகாவூர்
திருத்தாண்டகம் : அரிகாம்போதி

திருச்சிற்றம்பலம்

குருகாம் வயிரமாங் கூறுநாளாங்
கொள்ளுங் கிழமையாங்கோளே தானாம்
பருகா அமுதமாம் பாலின் நெய்யாம்
பழத்தின் இரதமாம் பாட்டிற் பண்ணாம்
ஒருகாலுமையாளோர் பாகனுமாம்
உள்நின்ற நாவிற் குரையாடியாம்
கருவா யுலகுக்கு முன்னே தோன்றுங்
கண்ணாங் கருகாவூரெந்தை தானே. 1

வித்தாம் முளையாகும் வேரே தானாம்
வேண்டும் உருவமாம் விரும்பி நின்ற
பத்தாம் அடியார்க்கோர் பாங்க னுமாம்
பால்நிறமு மாம்பரஞ் சோதி தானாம்
தொத்தாம் அமரர் கணஞ் சூழ்ந்து போற்றத்
தோன்றாதென் னுள்ளத்தினுள்ளே நின்ற
கத்தாம் அடியேற்குக் காணா காட்டுங்
கண்ணாங் கருகாவூ ரெந்தை தானே. 2

www.saivamonline.com

பூத்தானாம் பூவின் நிறத்தா னுமாம்
பூக்குளால் வாசமாய் மன்னி நின்ற
கோத்தானாங் கோல்வளையாள் கூறனாகுங்
கொண்ட சமயத்தார் தேவனாகி
ஏத்தாதார்க் கென்றுமிடரே துன்பம்
ஈவானா மென்னெஞ்சத் துள்ளேநின்று
காத்தானாங் காலன் அடையா வண்ணங்
கண்ணாங் கருகாவூ ரெந்தை தானே. 3

இரவனாம்எல்லி நடமாடியாம்
எண்டிசைக்குந் தேவனாம் என்னுளானாம்
அரவனாம் அல்லல் அறுப்பா னுமாம்
ஆகாச மூர்த்தியாம் ஆனே றேறும்
குரவனாங் கூற்றையுதைத்தான் தானாங்
கூறாத வஞ்சக் குயலர்க் கென்றும்
கரவனாங் காட்சிக் கெளியா னுமாங்
கண்ணாங் கருகாவூ ரெந்தை தானே. 4

படைத்தானாம் பாரை யிடந்தா னாகும்
பரிசொன்றறி யாமை நின்றான் தானாம்
உடைத்தானாம் ஒன்னார் புரங்கள் மூன்றும்
ஒள்ளழலால் முட்டி யொருக்கநின்று
அடைத்தானாஞ் சூலம் மழுவோர் நாக
மசைத்தானாம் ஆனேறொன்றூர்ந்தா னாகும்
கடைத்தானாங் கள்ளமறிவார் நெஞ்சிற்
கண்ணாங் கருகாவூ ரெந்தை தானே. 5

மூலனாம் மூர்த்தியாம் முன்னே தானாம்
மூவாத மேனி முக்கண்ணி னானாம்
சீலனாஞ் சேர்ந்தா ரிடர்கள் தீர்க்குஞ்
செல்வனாஞ் செஞ்சுடர்க்கோர் சோதி தானாம்
மாலனாம் மங்கையோர் பங்கனாகும்
மன்றாடி யாம்வானோர் தங்கட்கெல்லாம்
காலனாம் காலனைக் காய்ந்தா னாகுங்
கண்ணாங் கருகாவூ ரெந்தை தானே. 6

www.saivamonline.com

அரைசே ரரவனாம் ஆலத் தனாம்
ஆதிரைநா ளானாம் அண்ட வானோர்
திரைசேர் திருமுடித் திங்க ளானாந்
தீவினைநாசனென் சிந்தை யானாம்
உரைசே ருலகத்தாருள்ளானுமாம்
உமையாளோர் பாகனாம் ஓத வேலிக்
கரைசேர் கடல்நஞ்சை யுண்டானாகுங்
கண்ணாங்கருகாவூ ரெந்தை தானே. 7

துடியாந் துடியின் முழக்கந் தானாஞ் சொல்லுவார்
சொல் வெல்லாஞ் சோதிப் பானாம்
படிதானாம் பாவமறுப் பானாகும் பால்நீற்ற
னாம்பரஞ் சோதி தானாம்
கொடியானாங் கூற்றை யுதைத்தா னாகுங்
கூறாத வஞ்சக் குயலர்க் கென்றும்
கடியானாங் காட்சிக் கரியா னாகுங்
கண்ணாங் கருகாவூ ரெந்தை தானே. 8

விட்டுருவங் கிளர்கின்ற சோதி யானாம்
விண்ணவர்க்கும் அறியாத சூழலானாம்
பட்டுருவ மாயானைத் தோல் கீண்டானாம்
பலபலவும் பாணி பயின்றான் தானாம்
எட்டுருவ மூர்த்தியாம் எண்தோ ளானாம்
என்னுச்சி மேலானாம் எம்பிரானாம்
கட்டுருவங் கடியானைக் காய்ந்தானாகுங்
கண்ணாங் கருகாவூ ரெந்தை தானே. 9

பொறுத்திருந்த புள்ளூர்வான் உள்ளானாகி
உள்ளிருந்தங் குள்நோய் களைவான் தானாய்ச்
செறுத்திருந்த மும்மதில்கள் மூன்றும் வேவச்
சிலைகுனியத் தீமூட்டுந்திண்மை யானாம்
அறுத்திருந்த கையானாம் அந்தார் அல்லி
யிருந்தானை யொருதலையைத் தெரிய நோக்கிக்
கறுத்திருந்த கண்டமுடையான் போலுங்
கண்ணாங் கருகாவூ ரெந்தை தானே. 10

www.saivamonline.com

ஒறுத்தானாம் ஒன்னார்புரங்கள் மூன்றும்
ஒள்ளழலைமாட்டியுடனே வைத்து
இறுத்தானாம் எண்ணான் முடிகள் பத்தும்
இசைந்தானாம் இன்னிசைகள் கேட்டானாகும்
அறுத்தானாம் அஞ்சும் அடக்கி யங்கே
ஆகாய மந்திரமுமானா னாகும்
கறுத்தானாங் காலனைக் காலால் வீழக்
கண்ணாங் கருகாவூ ரெந்தை தானே. 11

திருச்சிற்றம்பலம்

www.saivamonline.com

## 8. கணவன், கொழுந்தன், மாமனார், மாமியார், நாத்தனார் கொடுமையிலிருந்து விடுபடவும், விருப்பமான வாழ்வும், வழிபாடும் அமையவும், தாய்வழி மரபுகள் சிறக்கவும் ஓத வேண்டிய பதிகம்

தாம் விரும்பிய வழிபாட்டை மேற்கொண்ட ஒரு பெண்ணின் பொருட்டு இறைவன் அன்று மாடு கட்டும் முளை(ஆப்பு) யிலிருந்து வெளிப்பட்டு அருள்பாலித்தது.

ஆசிரியர் : திருநாவுக்கரசர்
தலம் : திருக்கன்றாப்பூர்
திருத்தாண்டகம் : (அரிகாம்போதி)

திருச்சிற்றம்பலம்

மாதினையோர் கூறுகந்தாய் மறைகொள் நாவா
மதிசூடீ வானவர்கள் தங்கட்கெல்லாம்
நாதனே யென்றென்று பரவி நாளும்
நைந்துருகி வஞ்சகமற் றன்பு கூர்ந்து
வாதனையால் முப்பொழுதும் பூநீர் கொண்டு
வைகல் மறவாது வாழ்த்தியேத்திக்
காதன்மையால் தொழுமடியார் நெஞ்சினுள்ளே
கன்றாப்பூர் நடுதறியைக் காண லாமே. 1

விடிவதுமே வெண்ணீற்றை மெய்யிற் பூசி
வெளுத்தமைந்த கீளொடுகோ வணமுந் தற்றுச்
செடியுடைய வல்வினைநோய் தீர்ப்பாய் என்றும்
செல்கதிக்கு வழிகாட்டுஞ் சிவனேயென்றும்
துடியனைய இடைமடவாள் பங்கா வென்றும்
சுடலைதனில் நடமாடுஞ் சோதீ யென்றும்
கடிமலர் தூய்த்தொழு மடியார் நெஞ்சி னுள்ளே
கன்றாப்பூர் நடுதறியைக் காண லாமே. 2

www.saivamonline.com

எவரேனுந் தாமாக விலாடத் திட்ட திருநீறுஞ்
சாதனமுங் கண்டாலுள்கி
உவராதே யவரவரைக் கண்டபோது
உகந்தடிமைத் திறநினைந்தங் குவந்து நோக்கி
இவர்தேவர் அவர்தேவ ரென்று சொல்லி
இரண்டாட்டா தொழிந்தீசன் திறமே பேணிக்
கவராதே தொழுமடியார் நெஞ்சி னுள்ளே
கன்றாப்பூர் நடுதறியைக் காண லாமே. 3

இலங்காலஞ் செல்லாநா ளென்று
நெஞ்சத்திடையாதே யாவர்க்கும் பிச்சையிட்டு
விலங்காதே நெறிநின்றங் கறிவே மிக்கு
மெய்யன்பு புகப் பெய்து பொய்யை நீக்கித்
துலங்கா மெய் வானவரைக் காத்து நஞ்சம்
உண்டபிரா னடியிணைக்கே சித்தம் வைத்துக்
கலங்காதே தொழுமடியார் நெஞ்சினுள்ளே
கன்றாப்பூர் நடு தறியைக் காண லாமே. 4

விருத்தனே வேலைவிட முண்ட கண்டா
விரிசடைமேல் வெண்திங்கள் விளங்கச் சூடும்
ஒருத்தனே உமைகணவா வுலக மூர்த்தீ
நுந்தாத வொண்சுடரே அடியார் தங்கள்
பொருத்தனே யென்றென்று புலம்பி நாளும்
புலனைத்தும் அகத் தடக்கிப் புலம்பி நோக்கிக்
கருத்தினால் தொழுமடியார் நெஞ்சினுள்ளே
கன்றாப்பூர் நடுதறியைக் காண லாமே. 5

பொசியினால் மிடைந்துபுழுப் பொதிந்த போர்வைப்
பொல்லாத புலாலுடம்பை நிலாசு மென்று
பசியினால் மீதூரப் பட்டே யீட்டிப்
பலர்க்குதவ லதுவொழிந்து பவளவாயார்
வசியினால கப்பட்டு வீழா முன்னம்
வானவர்கோன் திருநாமம் அஞ்சுஞ் சொல்லிக்
கசிவினால் தொழுமடியார் நெஞ்சினுள்ளே
கன்றாப்பூர் நடுதறியைக் காண லாமே. 6

www.saivamonline.com

ஐயினால் மிடறடைப்புண் டாக்கை விட்டு
ஆவியார் போவதுமே அகத்தார் கூடி
மையினாற் கண்ணெழுதி மாலை சூட்டி
மயானத்திலிடு வதன்முன் மதியஞ் சூடும்
ஐயனார்க் காளாகி அன்புமிக்கு
வகங்குழைந்து மெய்யரும்பி அடிகள் பாதங்
கையினால் தொழுமடியார் நெஞ்சினுள்ளே
கன்றாப்பூர் நடுதறியைக் காண லாமே. 7

திருதிமையால் ஐவரையுங் காவ லேவித்
திகையாதே சிவாய நம என்னுஞ் சிந்தைச்
சுருதிதனைத்துயக்கறுத்துத் துன்ப வெள்ளக்
கடல்நீந்திக் கரையேறுங் கருத்தே மிக்குப்
பரிதிதனைப் பற்பறித்த பாவநாசா
பரஞ்சுடரே யென்றென்றுபரவி நாளுங்
கருதிமிகத் தொழுமடியார் நெஞ்சினுள்ளே
கன்றாப்பூர் நடுதறியைக் காண லாமே. 8

குனிந்தசிலை யாற்புரமுன் றெரித்தாய் என்றும்
கூற்றுதைத்த குரைகழற்சே வடியாய் என்றும்
தனஞ்சயற்குப் பாசுபத மீந்தாய் என்றும்
தசக்கிரிவன் மலையெடுக்க விரலாலூன்றி
முனிந்தவன்தன் சிரம்பத்துந் தாளுந் தோளும்
முரணழித்திட் டருள்கொடுத்த மூர்த்தீ யென்றும்
கனிந்து மிகத் தொழுமடியார் நெஞ்சி னுள்ளே
கன்றாப்பூர் நடுதறியைக் காண லாமே. 9-10

திருச்சிற்றம்பலம்

www.saivamonline.com

## 9. வேண்டிய செல்வ வளம் வேண்டியவாறு கிடைக்க ஓத வேண்டிய பதிகம்

1. பெற்றோர் மற்றும் உற்றார் உறவினர்க்கு உதவவும்,
2. நாடும் வீடும் நலம் பெறக் காரியங்கள் இயற்றவும்,
3. வறுமை நீங்கவும் அருளவல்லது.

ஆசிரியர் : திருஞானசம்பந்தர்
பண் : காந்தாரபஞ்சமம்
இராகம் : கேதாரகௌளை
தலம் : திருஆவடுதுறை

திருச்சிற்றம்பலம்

இடரினும் தளரினும் எனது உறு நோய்
தொடரினும் உனகழல் தொழுது எழுவேன்;
கடல்தனில் அமுதொடு கலந்த நஞ்சை
மிடறினில் அடக்கிய வேதியனே. 1

இதுவோ எமை ஆளுமாறு? ஈவது ஒன்று எமக்கு
இல்லை யேல் அதுவோ உனது இன்னருள்?
ஆவடுதுறை அரனே.

வாழினும் சாவினும் வருந்தினும் போய்
வீழினும் உனகழல் விடுவேன் அல்லேன்;
தாழ்இளம் தடம்புனல் தயங்கு சென்னிப்
போழ் இளமதி வைத்த புண்ணியனே. 2

இதுவோ எமை ஆளுமாறு? ஈவது ஒன்றுஎமக்கு
இல்லையேல் அதுவோ உனது இன்னருள்?
ஆவடுதுறை அரனே.

www.saivamonline.com

நனவினும் கனவினும் நம்பா, உன்னை
மனவினும் வழிபடல் மறவேன், அம்மான்
புனல்விரி நறுங் கொன்றைப் போது அணிந்த
கனல்எரி அனல்புல்கு கையவனே. 3

இதுவோ எமை ஆளுமாறு? ஈவது ஒன்று எமக்கு
இல்லை யேல் அதுவோ உனது இன்னருள்?
ஆவடுதுறை அரனே.

தும்மலொடு அருந்துயர் தோன்றிடினும்
அம்மலர் அடிஅலால், அரற்றாது என் நா;
கைம்மல்கு வரிசிலைக் கணை ஒன்றினால்
மும்மதில் எரி எழ முனிந்தவனே. 4

இதுவோ எமை ஆளுமாறு? ஈவது ஒன்று எமக்கு
இல்லை யேல் அதுவோ உனது இன்னருள்?
ஆவடுதுறை அரனே.

கையது வீழினும் கழிவு உறினும்
செய்கழல் அடிஅலால் சிந்தை செய்யேன்
கொய்அணி நறுமலர் குலாய சென்னி
மைஅணி மிடறு உடை மறையவனே. 5

இதுவோ எமை ஆளுமாறு? ஈவது ஒன்று எமக்கு
இல்லை யேல் அதுவோ உனது இன்னருள்?
ஆவடுதுறை அரனே.

வெம்துயர் தோன்றி ஓர் வெருஉறினும்
எந்தாய், உன் அடிஅலால் ஏத்தாது, என் நா;
ஐந்தலை அரவு கொண்டு அரைக்கு அசைத்த
சந்தவெண் பொடிஅணி சங்கரனே. 6

இதுவோ எமை ஆளுமாறு? ஈவது ஒன்று எமக்கு
இல்லை யேல் அதுவோ உனது இன்னருள்?
ஆவடுதுறை அரனே.

www.saivamonline.com

வெப்பொடுவிரவி ஓர் வினை வரினும்
அப்பா, உன் அடி அலால் அரற்றாது, என் நா;
ஒப்புடை ஒருவனை உரு அழிய
அப்படி அழல் எழ விழித்தவனே. 7

இதுவோ எமை ஆளுமாறு? ஈவது ஒன்று எமக்கு
இல்லை யேல் அதுவோ உனது இன்னருள்?
ஆவடுதுறை அரனே.

பேர்இடர் பெருகி, ஓர் பிணி வரினும்
சீர் உடைக் கழல் அலால், சிந்தை செய்யேன்;
ஏர் உடை மணி முடி இராவணனை
ஆர் இடர் பட, வரை அடர்த்தவனே. 8

இதுவோ எமை ஆளுமாறு? ஈவது ஒன்று எமக்கு
இல்லை யேல் அதுவோ உனது இன்னருள்?
ஆவடுதுறை அரனே.

உண்ணினும் பசிப்பினும் உறங்கினும் நின்
ஒண்மலர் அடிஅலால் உரையாது, என் நா;
கண்ணனும் கடிகமழ் தாமரை மேல்
அண்ணலும் அளப்பு அரிது ஆயவனே. 9

இதுவோ எமை ஆளுமாறு? ஈவது ஒன்று எமக்கு
இல்லை யேல் அதுவோ உனது இன்னருள்?
ஆவடுதுறை அரனே.

பித்தொடு மயங்கி ஓர் பிணி வரினும்
அத்தா, உன்அடி அலால் அரற்றாது என்நா;
புத்தரும் சமணரும் புறன் உரைக்கப்
பத்தர்கட்கு அருள் செய்து பயின்றவனே. 10

இதுவோ எமை ஆளுமாறு? ஈவது ஒன்று எமக்கு
இல்லை யேல் அதுவோ உனது இன்னருள்?
ஆவடுதுறை அரனே.

www.saivamonline.com

அலைபுனல் ஆவடு துறைஅமர்ந்த
இலைநுனை வேல்படை எம் இறையை
நலம்மிகு ஞானசம் பந்தன் சொன்ன
விலைஉடை அருந்தமிழ் மாலை வல்லார் 11

வினை ஆயின நீங்கிப்போய், விண்ணவர்
வியன் உலகம் நிலை ஆக முன்ஏறுவர்;
நிலமிசை நிலைஇலரே.

திருச்சிற்றம்பலம்

www.saivamonline.com

## 10. உண்ண உணவும், உடுக்க உடையும் வாழ்நாள் முழுவதும் தடையின்றிக் கிடைக்க ஓத வேண்டிய பதிகம்

நம் தேவைகள் மனிதர்களால் பூரணமாக நிறைவேறாது; சிவனிடம் கையேந்துங்கள்; சிவனருள் உணவும் உடையும் தரும்; இடையூறு அகற்றும்; மறுமை இன்பத்தையும் வழங்கும்.

ஆசிரியர் : சுந்தரமூர்த்தி சுவாமிகள்
பண் : கொல்லி
இராகம் : நவரோசு
தலம் : திருப்புகலூர்

திருச்சிற்றம்பலம்

தம்மையே புகழ்ந்து இச்சை பேசினும்
சார்வினும் தொண்டர் தருகிலாப்
பொய்ம்மை யாளரைப் பாடாதே,
எந்தை புகலூர் பாடுமின் புலவீர்காள்
இம்மையே தரும் சோறும் கூறையும்,
ஏத்தலாம்இடர் கெடலுமாம்
அம்மையே சிவலோகம் ஆள்வதற்கு
யாதும் ஐயுறவு இல்லையே. 1

மிடுக்கு இலாதானை வீமனே,
விறல் விசயனே வில்லுக்கு இவன் என்று
கொடுக்கிலாதானைப் பாரியே
என்று கூறினும் கொடுப்பார் இலை;
பொடிக்கொள் மேனி, எம் புண்ணியன்,
புகலூரைப் பாடுமின் புலவீர்காள்;
அடுக்குமேல் அமர் உலகம் ஆள்வதற்கு
யாதும் ஐயுறவு இல்லையே. 2

www.saivamonline.com

காணியேல் பெரிது உடையனே,
கற்று நல்லனே, சுற்றம் நல்கிளை
பேணியே, விருந்து ஓம்புமே
என்று பேசினும் கொடுப்பார் இலை
பூணி பூண்டு உழப்புள் சிலம்பும்,
தண்புகலூர் பாடுமின், புலவீர்காள்;
ஆணியாய் அமருலகம் ஆள்வதற்கு,
யாதும் ஐயுறவு இல்லையே. 3

நரைகள் போந்து மெய் தளர்ந்து,
மூத்து, உடல்நடுங்கி நிற்கும் இக்கிழவனை
வரைகள் போல், திரள் தோளனே
என்று வாழ்த்தினும் கொடுப்பார் இலை;
புரைவெள் ஏறு உடைப் புண்ணியன்
புகலூரைப் பாடுமின், புலவீர்காள்
அரையனாய் அமருலகம் ஆள்வதற்கு
யாதும் ஐயுறவு இல்லையே. 4

வஞ்ச நெஞ்சனை, மா சழக்கனைப்
பாவியை, வழக்கு இல்லியைப்
பஞ்ச துட்டனை, சாதுவே
என்று பாடினும் கொடுப்பார் இலை;
பொன்செய் செஞ்சடைப் புண்ணியன்,
புகலூரைப் பாடுமின், புலவீர்காள்;
நெஞ்சில் நோய் அறுத்து,
உஞ்சுபோவதற்கு யாதும் ஐயுறவு இல்லையே. 5

நலம் இலாதானை, நல்லனே என்று,
நரைத்த மாந்தரை, இளையனே
குலம் இலாதானைக் குலவனே என்று
கூறினும் கொடுப்பார் இலை;
புலம் எலாம் வெறி கமழும் பூம்
புகலூரைப் பாடுமின், புலவீர்காள்;
அலமராது அமருலகம் ஆள்வதற்கு
யாதும் ஐயுறவு இல்லையே. 6

www.saivamonline.com

நோயனைத், தடந்தோளனே என்று
நொய்ய மாந்தரை, விழுமிய
தாய் அன்றோ புலவோர்க்கு எலாம் என்று
சாற்றினும் கொடுப்பார் இலை;
போய் உழன்று கண் குழியாதே,
எந்தை புகலூர் பாடுமின், புலவீர்காள்;
ஆயம் இன்றிப் போய்,அண்டம்
ஆள்வதற்கு யாதும் ஐயுறவு இல்லையே. 7

என் விழுந்த இடம் பார்க்கும் ஆகிலும்
ஈக்கும் ஈகிலன் ஆகிலும்
வள்ளலே, எங்கள் மைந்தனே
என்று வாழ்த்தினும் கொடுப்பார் இலை;
புள் எலாம் சென்று சேரும் பூம்
புகலூரைப் பாடுமின், புலவீர்காள்;
அல்லல் பட்டு அழுந்தாது போவதற்கு,
யாதும் ஐயுறவு இல்லையே. 8

கற்றிலாதானைக், கற்று நல்லனே
காமதேவனை ஒக்குமே
முற்றிலாதானை, முற்றனே என்று
மொழியினும் கொடுப்பார் இலை;
பொத்தில் ஆந்தைகள் பாட்டு அறாப்
புகலூரைப் பாடுமின், புலவீர்காள்;
அத்தன்ஆய் அமருலகம் ஆள்வதற்கு
யாதும் ஐயுறவு இல்லையே. 9

தையலாருக்குஓர் காமனே என்றும்,
சால நல் வழக்குடையனே
கைஉலாவிய வேலனே என்று,
கழறினும் கொடுப்பார் இலை;
பொய்கை ஆவியில் மேதிபாய்
புகலூரைப் பாடுமின், புலவீர்காள்;
ஐயனாய் அமருலகம் ஆள்வதற்கு,
யாதும் ஐயுறவு இல்லையே. 10

www.saivamonline.com

செறுவினில் செழும் கமலம் ஓங்கு
    தென்புகலூர் மேவிய செல்வனை
நறவம் பூம்பொழில் நாவலூரன், வனப்பகை
    அப்பன், சடையன் தன்
சிறுவன், வன் தொண்டன், ஊரன், பாடிய
    பாடல் பத்து இவை வல்லவர்
அறவனார் அடி சென்று சேர்வதற்கு,
    யாதும் ஐயுறவு இல்லையே. 11

திருச்சிற்றம்பலம்

www.saivamonline.com

## 11. வாக்கு வன்மை பெறவும், தடையின்றி நீரோட்டமாகப் பேசவும், வாதப் பிரதிவாதங்களில் வெற்றி பெறவும் ஓத வேண்டிய பதிகம்

மேடைகளில் வழக்காடி வெற்றிபெறவும், வழக்குரைஞர்கள் வாதத்திறமை பெறவும், சொல்லில் சோர்வு அகலவும், பேசும் திறமை வளரவும் அருளும் பாடல்கள். ஊமை நீங்கி ஓர் ஈழத்துப்பெண் பேசியதாக மணிவாசகர் அருளியது.

ஆசிரியர் : மாணிக்கவாசகர்
பதிகம் : திருச்சாழல்
இராகம் : மோகனம்
தலம் : தில்லை

திருச்சிற்றம்பலம்

பூசுவதும் வெண்ணீறு
பூண்பதுவும் பொங்குஅரவம்
பேசுவதும் திருவாயால்
மறைபோலும்? காண், ஏடி!
பூசுவதும் பேசுவதும்
பூண்பதுவும் கொண்டு என்னை?
ஈசன்அவன், எவ்வுயிர்க்கும்
இயல்புஆனான்; சாழலோ. 1

என்அப்பன், எம்பிரான்
எல்லார்க்கும் தான்ஈசன்
துன்னம்பெய் கோவணமாக்
கொள்ளும்அது, என்ஏடீ?
மன்னுகலை, துன்னுபொருள்,
மறைநான்கே, வான்சரடாத்
தன்னையே கோவணமாச்
சாத்தினன்; காண்; சாழலோ. 2

www.saivamonline.com

கோயில் சுடுகாடு
கொல்புலித்தோல், நல்ஆடை;
தாயும் இலி; தந்தை இலி;
தான்தனியன்; காண்; ஏடி!
தாயும் இல், தந்தை இலி
தான்தனியன் ஆயிடினும்,
காயில், உலகு அனைத்தும்,
கல்பொடி, காண், சாழலோ. 3

அயனை, அனங்கனை,
அந்தகனை, சந்திரனை
வயனங்கள் மாயா
வடுச்செய்தான்; காண், ஏடீ!
நயனங்கள் மூன்றுஉடைய
நாயகனே தண்டித்தால்
சயம்அன்றோ வானவர்க்குத்
தாழ்குழலாய்? சாழலோ. 4

தக்கனையும் எச்சனையும்
தலைஅறுத்து, தேவர்கணம்
தொக்கனவவந் தவர்த்தம்மைத்
தொலைத்ததுதான் என் ஏடீ?
தொக்கனவந் தவர்தம்மைத்
தொலைத்துஅருளி, அருள்கொடுத்துஅங்கு
எச்சனுக்கு மிகைத்தலைமற்று
அருளினன்காண்; சாழலோ. 5

அலரவனும் மால்அவனும்
அறியாமே, அழல்உருஆய்,
நிலம்முதல், கீழ்அண்டம்உற
நின்றதுதான், என் ஏடீ?
நிலம்முதல் கீழ்அண்டம்உற
நின்றிலனேல், இருவரும்தம்
சலமுகத்தால் ஆங்காரம்
தவிரார், காண்; சாழலோ. 6

www.saivamonline.com

மலைமகளை ஒருபாகம்
வைத்தலுமே, மற்றொருத்தி
சலமுகத்தால் அவன்சடையில்
பாயும்அது, என் ஏடீ?
சலமுகத்தால் அவன் சடையில்
பாய்ந்திலளேல், தரணிஎல்லாம்,
பிலமுகத்தே புகப்பாய்ந்து,
பெருங்கேடாம்; சாழலோ. 7

கோலாலம் ஆகிக் குரைகடலவாய்;
அன்று எழுந்த
ஆலாலம் உண்டான்;
அவன் சதுர்தான் என் ஏடீ?
ஆலாலம் உண்டிலனேல்,
அன்றுஅயன் மால் உள்ளிட்ட
மேல்ஆய தேவர்எல்லாம்
வீடுவர்காண்; சாழலோ. 8

தென்பால் உகந்து ஆடும்
தில்லைச்சிற் றம்பலவன்,
பெண்பால் உகந்தான்
பெரும்பித்தன் காண்; ஏடீ!
பெண்பால் உகந்திலனேல்
பேதாய், இருநிலத்தோர்
விண்பால் யோகுஎய்தி
வீடுவர்காண்; சாழலோ. 9

தான்அந்தம் இல்லான்
தனைஅடைந்த நாயேனை
ஆனந்த வெள்ளத்து
அழுத்துவித்தான்; காண்; ஏடீ!
ஆனந்த வெள்ளத்து
அழுத்துவித்த திருவடிகள்,
வான்உந்து தேவர்கட்குஓர்
வான்பொருள்; காண்; சாழலோ. 10

www.saivamonline.com

நங்காய், இதுஎன்னதவம்?
நரம்போடு எலும்புஅணிந்து
கங்காளம் தோள்மேலே
காதலித்தான்; காண் ஏடீ!
கங்காளம் ஆமாகேள்
கால அந்தரத்து இருவர்,
தம்காலம் செய்யத்
தரித்தனன்காண் சாழலே. 11

கான் ஆர் புலித்தோல்
உடை; தலை ஊண்; காடுபதி
ஆனால் அவனுக்கு இங்கு
ஆட்படுவார் ஆர்? ஏடீ!
ஆனாலும் கேளாய்
அயனும் திருமாலும்,
வான்நாடர் கோவும்,
வழி அடியார் சாழலோ. 12

உலகுஅறியத் தீ வேட்டான்
என்னும், அது என் ஏடீ!
உலகுஅறியத் தீ வேளாது
ஒழிந்தனனேல், உலகுஅனைத்தும்
கலைநவின்ற பொருள்கள் எல்லாம்,
கலங்கிடும், காண்; சாழலோ. 13

தேன்புக்க தண்பணைசூழ்
தில்லைச்சிற் றம்பலவன்
தான்புக்கு நட்டம்
பயிலும் அது என்? ஏடீ!
தான்புக்கு நட்டம்
பயின்றிலனேல், தரணிஎல்லாம்
ஊன்புக்க வேல் காளிக்கு
ஊட்டுஆம்; காண்; சாழலோ. 14

www.saivamonline.com

கடகரியும் பரிமாவும்
    தேரும் உகந்து ஏறாதே,
இடபம் உகந்து ஏறியவாறு,
    எனக்குஅறிய இயம்பு; ஏடீ!
தடமதில்கள் அவைமூன்றும்,
    தழல்எரித்த அந்நாளில்,
இடபம் அதுவாய்த் தாங்கினான்,
    திருமால்காண்; சாழலோ. 15

நன்றாக நால்வர்க்கும்
    நான்மறையின் உட்பொருளை,
அன்று, ஆலின்கீழ் இருந்து, அங்கு
    அறம் உரைத்தான்; காண்; ஏடீ!
அன்று, ஆலின்கீழ் இருந்து, அங்கு
    அறம் உரைத்தான் ஆயிடினும்
கொன்றான்காண், புரம்மூன்றும்
    கூட்டோடே; சாழலோ. 16

அம்பலத்தே கூத்துஆடி,
    அமுதுசெயப் பலிதிரியும்
நம்பனையும் தேவன் என்று,
    நண்ணும் அது என்? ஏடீ!
நம்பனையும் ஆமாகேள்;
    நான்மறைகள் தாம் அறியா
எம்பெருமான், ஈசா என்று
    ஏத்தின காண்; சாழலோ. 17

சலம் உடைய சலந்தரன் தன்
    உடல்தடிந்த நல் ஆழி,
நலம்உடைய நாரணற்கு, அன்று
    அருளியவாறு என்? ஏடீ!
நலம் உடைய நாரணன், தன்
    நயனம்இடந்து அரன் அடிக்கீழ்
அலர்ஆக இட, ஆழி
    அருளினன்; காண்; சாழலோ. 18

www.saivamonline.com

அம்பரம்ஆம், புள்ளித்தோல்;
ஆலாலம் ஆர்அமுதம்;
எம்பெருமான் உண்டசதுர்
எனக்கு அறிய இயம்பு; ஏடீ!
எம்பெருமான் ஏதுஉடுத்து
அங்குஏது அமுது செய்திடினும்
தம்பெருமை தான் அறியாத்
தன்மையன்; காண்; சாழலோ. 19

அரும்தவர்க்கு ஆலின்கீழ்
அறம்முதலா நான்கினையும்
இருந்து, அவர்க்கு அருளும் அது
எனக்கு அறிய இயம்பு; ஏடீ!
அரும்தவர்க்கு, அறம்முதல் நான்கு
அன்றுஅருளிச் செய்திலனேல்
திருந்த, அவருக்கு உலகுஇயற்கை
தெரியா; காண்; சாழலோ. 20

திருச்சிற்றம்பலம்

www.saivamonline.com

## 12. நற்குணமும், நற்செயலும் உடைய உயர்ந்தோர் நம் உறவாக அமையவும், தாயினும் நல்ல தலைவனாகிய சிவன் அருள்திறம் நம் வாயினும், மனத்தினும் மன்னி நிற்கவும், திருக்கோணமலை அமர்ந்தான் திருவருள் வேண்டி ஓத வேண்டிய பதிகம்

ஆசிரியர் : திருஞானசம்பந்தர்
பண் : புறநீர்மை
இராகம் : பௌளி
தலம் : திருக்கோணமலை

திருச்சிற்றம்பலம்

நிரைகழல் அரவஞ் சிலம்பொலி யலம்பும்
நிமலர் நீறணி திருமேனி
வரைகெழு மகளோர் பாகமாப் புணர்ந்த
வடிவினர் கொடியணி விடையர்
கரைகெழு சந்துங் காரகிற் பிளவும்
அளப்பருங் கனமணி வரன்றிக்
குரைகடல் ஓதம் நித்திலங் கொழிக்குங்
கோணமா மலையமர்ந் தாரே. 1

கடிதென வந்த கரிதனை யுரித்து அவ்வுரி
மேனிமேற் போர்ப்பர்
பிடியென நடையாள் பெய்வளை மடந்தை
பிறைநுத லவளொடும் உடனாய்த்
கொடிதெனக் கதறுங் குரைகடல் சூழ்ந்து
கொள்ளமுன் நித்திலஞ் சுமந்து
குடிதனை நெருங்கிப் பெருக்கமாய்த் தோன்றுங்
கோணமாமலை யமர்ந்தாரே. 2

www.saivamonline.com

பனித்திளந் திங்கட் பைந்தலை நாகம்
படர்சடை முடியிடைவைத்தார்
கனித்திளந் துவர்வாய்க் காரிகை
பாகமாக முன்கலந்தவர் மதில்மேல்
தனித்தபே ருருவ விழித்தழல் நாகந்
தாங்கிய மேருவெஞ் சிலையாக்
குனித்ததோர் வில்லார் குரைகடல் சூழ்ந்த
கோணமா மலையமர்ந்தாரே. 3

பழித்திளங் கங்கை சடையிடை வைத்துப்
பாங்குடை மதனனைப் பொடியா
விழித்தவன்தேவி வேண்ட முன்கொடுத்த
விமலனார் கமலமார் பாதர்
தெழித்துமுன் அரற்றுஞ் செழுங்கடல்
தரளஞ் செம்பொனும் இப்பியுஞ் சுமந்து
கொழித்துவன் திரைகள் கரையிடைச் சேர்க்குங்
கோணமா மலையமர்ந் தாரே. 4

தாயினும் நல்லதலைவரென் றடியார்
தம்மடி போற்றிசைப்பார்கள்
வாயினும் மனத்தும் மருவிநின் றகலா
மாண்பினர் காண்பல வேடர்
நோயிலும் பிணியுந் தொழிலர்பால் நீக்கி
நுழைதருநூலினர் ஞாலம்
கோயிலுஞ் சுனையுங் கடலுடன் சூழ்ந்த
கோணமா மலையமர்ந் தாரே. 5

பரிந்துநன் மனத்தால் வழிபடும் மாணி
தன்னுயிர் மேல்வருங் கூற்றைத்
திரிந்திடா வண்ணம் உதைத்தவற்கருளுஞ்
செம்மையார் நம்மையாளுடையார்
விரிந்துயர் மௌவல் மாதவி புன்னை
வேங்கைவண் செருந்தி செண்பகத்தின்
குருந்தொடு முல்லை கொடிவிடும் பொழில்
சூழ்கோணமா மலையமர்ந்தாரே. 6-7

www.saivamonline.com

எடுத்தவன் தருக்கை யிழித்தவர் விரலால்
ஏத்திட ஆத்தமாம் பேறு
தொடுத்தவர் செல்வந் தோன்றிய பிறப்பும்
இறப்பறி யாதவர் வேள்வி
தடுத்தவர் வனப்பால் வைத்ததோர் கருணை
தன்னருட் பெருமையும் வாழ்வும்
கொடுத்தவர் விரும்பும் பெரும்புக ழாளர்
கோணமா மலை யமர்ந் தாரே. 8

அருவரா தொருகை வெண்டலை யேந்தி
யகந்தொறும் பலியுடன் புக்க
பெருவரா யுறையும் நீர்மையர் சீர்மைப்
பெருங்கடல் வண்ணனும் பிரமன்
இருவரும் அறியா வண்ணம்ஒள் எரியாய்
உயர்ந்தவர் பெயர்ந்தநன் மாற்கும்
குருவராய் நின்றார் குரைகழல் வணங்கக்
கோணமா மலையமர்ந் தாரே. 9

நின்றுணுஞ் சமணும் இருந்துணுந் தேரும்
நெறியலாதன புறங்கூற
வென்றுநஞ் சுண்ணும் பரிசினர் ஒரு பால்
மெல்லிய லொடும்உடனாகித்
துன்றுமொண் பௌவமவ்வலுஞ் சூழ்ந்து
தாழ்ந்துறு திரைபலமோதிக்
குன்று மொண்கானல் வாசம்வந் துலவுங்
கோணமா மலையமர்ந் தாரே. 10

குற்றமி லாதார் குரைகடல் சூழ்ந்த
கோணமா மலையமர்ந்தாரைக்
கற்றுணர் கேள்விக் காழியர் பெருமான்
கருத்துடை ஞானசம்பந்தன்
உற்றசெந் தமிழார் மாலை யீரைந்தும்
உரைப்பவர் கேட்பவர் உயர்ந்தோர்
சுற்றமுமாகித் தொல்வினை யடையார்
தோன்றுவர் வானிடைப் பொலிந்தே. 11

திருச்சிற்றம்பலம்

www.saivamonline.com

## 13. நம்பிக்கை பிறக்கவும், நம்பினார் துன்பம் அகலவும், தொழுவார்க்கு இன்பம் பெருகவும், சிவனருளால் பன்னலங்களும் வாய்க்கவும் ஓத வேண்டிய பதிகம்

ஆசிரியர் : திருஞானசம்பந்தர்
பண் : குறிஞ்சி
இராகம் : அரிகாம்போதி
தலம் : திரு ஆலவாய்
யாப்பு : திருவிருக்குக்குறள்

திருச்சிற்றம்பலம்

நீலமாமிடற், றால வாயிலான்
பால தாயினார், ஞாலம் ஆள்வரே. 1

ஞாலம் ஏழுமாம், ஆல வாயிலார்
சீலமேசொலீர், காலன் வீடவே. 2

ஆல நீழலார், ஆல வாயிலார்
கால காலனார், பால தாமினே. 3

அந்த மில்புகழ், எந்தை யாலவாய்
பந்தி யார்கழல், சிந்தை செய்ம்மினே. 4

ஆடலேற்றினான், கூட லாலவாய்
பாடி யேமனம், நாடி வாழ்மினே. 5

அண்ணல் ஆலவாய், நண்ணி னான்றனை
எண்ணி யேதொழத் திண்ணம் இன்பமே. 6

அம்பொன் ஆலவாய், நம்ப னார்கழல்
நம்பி வாழ்பவர், துன்பம் வீடுமே. 7

www.saivamonline.com

அரக்க னார்வலி, நெருக்கன் ஆலவாய்
உரைக்கு முள்ளத்தார்க் கிரக்கம் உண்மையே. 8

அருவன் ஆலவாய், மருவி னான்றனை
இருவ ரேத்தநின், றுருவம் ஒங்குமே. 9

ஆரம் நாகமாம், சீரன் ஆலவாய்த்
தேர மண்செற்ற, வீர னென்பரே. 10

அடிகள் ஆலவாய்ப், படிகொள் சம்பந்தன்
முடிவி லின்தமிழ், செடிகள் நீக்குமே. 11

திருச்சிற்றம்பலம்

www.saivamonline.com

## 14. அல்லல்கள் அகலவும் வாழ்க்கை ஒளிபெறவும், சிவபெருமான் திருவருளை உரிமையுடன் வேண்டிப் பெறவும் ஓத வேண்டிய பதிகம்

சுந்தரமூர்த்தி சுவாமிகள் வலக்கண்பார்வை வேண்டிப் பாடி ஒளிபெற்ற பதிகம்.

ஆசிரியர் : சுந்தரமூர்த்திசுவாமிகள்
பண் : செந்துருத்தி
இராகம் : மத்தியமாவதி
தலம் : திருவாரூர்

திருச்சிற்றம்பலம்

மீளா அடிமை உமக்கே ஆளாய்ப்,
பிறரை வேண்டாதே
மூளாத் தீப் போல் உள்ளே கனன்று,
முகத்தால் மிகவாடி
ஆளாய் இருக்கும் அடியார் தங்கள்
அல்லல் சொன்னக்கால்
வாளாங்கு இருப்பீர்? திருவாரூரீர்
வாழ்ந்து போதீரே. 1

விற்றுக்கொள்வீர்; ஒற்றி அல்லேன்;
விரும்பி ஆட்பட்டேன்;
குற்றம் ஒன்றும் செய்தது இல்லை;
கொத்தை ஆக்கினீர்;
எற்றுக்கு அடிகேள், என்கண்
கொண்டீர்? நீரே பழிப்பட்டீர்;
மற்றைக் கண்தாள் தாராது ஒழிந்தால்,
வாழ்ந்து போதீரே. 2

அன்றில் முட்டாது அடையும் சோலை
ஆரூர் அகத்தீரே,
கன்று முட்டி உண்ணச் சுரந்த
காலி அவைபோல,
என்றும் முட்டாப் பாடும் அடியார்
தம்கண் காணாது,
குன்றில் முட்டிக் குழியில் விழுந்தால்,
வாழ்ந்து போதீரே. 3

துருத்தி உறைவீர்; பழனம் பதியாச்
சோற்றுத்துறை ஆள்வீர்,
இருக்கை திருஆரூரே உடையீர்;
மனமேஎன வேண்டா;
அருத்தி உடைய அடியார் தங்கள்
அல்லல் சொன்னக்கால்
வருத்தி வைத்து, மறுமை பணித்தால்,
வாழ்ந்து போதீரே. 4

செந்தண் பவளம் திகழும் சோலை
இதுவோ திருஆரூர்?
எந்தம் அடிகேள், இதுவே ஆம்ஆறு,
உமக்கு ஆட்பட்டோர்க்கு?
சந்தம் பலவும் பாடும் அடியார்
தம் கண் காணாது
வந்து, எம்பெருமான் முறையோ?
என்றால், வாழ்ந்து போதீரே. 5

தினைத்தாள் அன்ன செங்கால்
நாரை சேரும் திரு ஆரூர்ப்
புனைத்தார் கொன்றைப் பொன்போல்
மாலைப் புரிபுன் சடையீரே,
தனத்தால் இன்றித் தாம்தாம்
மெலிந்து, தம்கண் காணாது,
மனத்தால் வாடி, அடியார்
இருந்தால், வாழ்ந்து போதீரே. 6

www.saivamonline.com

ஆயம் பேடை அடையும் சோலை
    ஆரூர் அகத்தீரே,
ஏய எம்பெருமான், இதுவே ஆம்ஆறு,
    உமக்கு ஆட்பட்டோர்க்கு?
மாயம் காட்டிப் பிறவி காட்டி,
    மறவா மனம்காட்டிக்
காயம் காட்டிக் கண்ணீர் கொண்டால்,
    வாழ்ந்து போதீரே. 7

கழியாய், கடல்ஆய், கலன்ஆய்,
    நிலன்ஆய், கலந்த சொல்ஆகி,
இழியாக் குலத்தில் பிறந்தோம்;
    உம்மை இகழாது ஏத்துவோம்
பழிதான் ஆவது அறியீர்,
    அடிகேள்பாடும் பத்தரோம்;
வழிதான் காணாது, அலமந்து
    இருந்தால் வாழ்ந்து போதீரே. 8

பேயோடேனும் பிரிவுஒன்று இன்னாது
    என்பர் பிறர்எல்லாம்;
காய்தான் வேண்டில், கனிதான் அன்றோ,
    கருதிக் கொண்டக்கால்?
நாய்தான் போல நடுவே திரிந்தும்,
    உமக்கு ஆட்பட்டோர்க்கு
வாய்தான் திறவீர்; திருஆரூரீர்,
    வாழ்ந்து போதீரே. 9

செருந்தி செம்பொன் மலரும் சோலை
    இதுவோ, திருஆரூர்?
பொருந்தித் திருமூ லட்டா னம்மே
    இடமாக் கொண்டீரே;
இருந்தும் நின்றும், கிடந்தும், உம்மை
    இகழாது ஏத்துவோம்;
வருந்தி வந்தும், உமக்கு ஒன்று
    உரைத்தால், வாழ்ந்து போதீரே. 10

www.saivamonline.com

காரூர் கண்டத்து எண்தோள் முக்கண்
கலைகள் பலஆகி,
ஆரூர்த் திருமூ லட்டா னத்தே
அடிப்பேர் ஆரூரன்;
பாரூர் அறிய, என்கண் கொண்டீர்,
நீரே பழிப்பட்டீர்,
வாரூர் முலையாள் பாகம் கொண்டீர்,
வாழ்ந்து போதீரே. 11

திருச்சிற்றம்பலம்

www.saivamonline.com

## 15. எத்தகைய துன்பம் (இடர்) எங்கிருந்து, எந்த ரூபத்தில் வந்தாலும் அந்தத் துயரங்கள் தவிடுபொடியாக்கி மறைந்து ஒழிய நம்பிக்கையுடன் ஓத வேண்டிய பதிகம்

இதனை இடர்களையும் திருப்பதிகம் என்பர். இன்றும் பல லட்சம் பேர் இதனை நியமத்துடன் ஓதி இடர் நீங்கி வருகின்றனர்.

ஆசிரியர் : திருஞானசம்பந்தர்
பண் : பழந்தக்கராகம்
இராகம் : சுத்தசாவேரி
தலம் : திருநெடுங்களம்

திருச்சிற்றம்பலம்

மறையுடையாய் தோலுடையாய் வார்சடைமேல் வளரும்
பிறையுடையாய் பிஞ்ஞகனே யென்றுனைப்பே சினல்லால்
குறையுடையார் குற்றம்ஓராய் கொள்கையினால் உயர்ந்த
நிறையுடையார் இடர்களையாய் நெடுங்களம்மேயவனே. 1

கனைத்தெழுந்த வெண்டிரைசூழ் கடலிடைநஞ் சுதன்னைத்
தினைத்தனையா மிடற்றில்வைத்த திருந்தியதேவ நின்னை
மனத்தகத்தோர் பாடல் ஆடல் பேணியிராப்பகலும்
நினைத்தெழுவார் இடர்களையாய் நெடுங்களம்மேயவனே. 2

நின்னடியே வழிபடுவான் நிமலாநினைக் கருத
என்னடியான் உயிரைவவ்வேல் என்றடற்கூற்றுதைத்த
பொன்னடியே பரவிநாளும் பூவொடுநீர் சுமக்கும்
நின்னடியார் இடர்களையாய் நெடுங்களம்மே யவனே. 3

www.saivamonline.com

மலைபுரிந்த மன்னவன்றன் மகளையோர் பால் மகிழ்ந்தாய்
அலைபுரிந்த கங்கைதங்கும் அவிர்சடையா ரூரா
தலைபுரிந்த பலிமகிழ்வாய் தலைவநின்றாள் நிழற்கீழ்
நிலைபுரிந்தார் இடர்களையாய் நெடுங்களம்மே யவனே. 4

பாங்கி னல்லார் படிமஞ் செய்வார் பாரிடமும் பலிசேர்
தூங்கிநல்லார் பாடலோடு தொழுகழலே வணங்கித்
தாங்கிநில்லா அன்பினோடுந் தலைவநின்தாள் நிழற்கீழ்
நீங்கிநில்லார் இடர்களையாய் நெடுங்களம்மே யவனே. 5

விருத்தனாகிப் பாலனாகி வேதமோர்நான் குணர்ந்து
கருத்தனாகிக் கங்கையாளைக் கமழ்சடைமேற் கரந்தாய்
அருத்தனாய ஆதிதேவன் அடியிணையே பரவும்
நிருத்தர்கீதர் இடர்களையாய் நெடுங்களம்மே யவனே. 6

கூறுகொண்டாய் மூன்றுமொன்றாக் கூட்டியோர்வெங் கணையால்
மாறுகொண்டார் புரமெரித்த மன்னவனே கொடிமேல்
ஏறுகொண்டாய் சாந்தமீதென் றெம்பெருமா னணிந்த
நீறுகொண்டார் இடர்களையாய் நெடுங்களம்மே யவனே. 7

குன்றின்உச்சிமேல்விளங்குங் கொடிமதில்சூழ் இலங்கை
அன்றிநின்ற அரக்கர்கோனை யருவரைக்கீழ் அடர்த்தாய்
என்றுநல்ல வாய்மொழியா லேத்தியிராப் பகலும்
நின்று நைவார் இடர்களையாய் நெடுங்களம்மே யவனே. 8

வேழ வெண்கொம் பொசித்தமாலும் விளங்கிய நான் முகனும்
சூழவெங்கும் நேடஆங்கோர் சோதியுளா கிநின்றாய்
கேழல்வெண்கொம் பணிந்தபெம்மான் கேடிலாப் பொன்னடியின்
நீழல்வாழ்வார் இடர்களையாய் நெடுங்களம்மே யவனே. 9

வெஞ்சொல் தஞ்சொல் லாக்கிநின்ற வேடமிலாச் சமணும்
தஞ்சமில்லாச் சாக்கியருந் தத்துவமொன்றறியார்
துஞ்சலில்லா வாய்மொழியால் தோத்திரம் நின்னடியே
நெஞ்சில்வைப்பார் இடர்களையாய் நெடுங்களம்மே யவனே.10

www.saivamonline.com

நீடவல்ல வார்சடையான் மேயநெடுங் களத்தைச்
சேடர் வாழும் மாமறுகிற் சிரபுரக்கோன் நலத்தால்
நாடவல்ல பனுவன்மாலை ஞானசம்பந்தன் சொன்ன
பாடல்பத்தும் பாடவல்லார் பாவம்ப றையுமே. 11

திருச்சிற்றம்பலம்

www.saivamonline.com

## 16. அச்சம் அகன்று மனத்தில் வீரம் பிறக்கவும் எந்த இடத்திலிருந்தும் வரும் எவ்வகையான மிரட்டல்களுக்கும் அடிபணியாத மன உறுதி சிறக்கவும், துன்பக்கலப்பே இல்லாத இன்ப வாழ்வு என்றும் அமையவும் ஓத வேண்டிய அரிய பதிகம்!

ஆசிரியர் : திருநாவுக்கரசர்
பொதுப்பதிகம், மறுமாற்றத் திருத்தாண்டகம், அரிகாம்போதி

திருச்சிற்றம்பலம்

நாமார்க்குங் குடியல்லோம் நமனை யஞ்சோம்
நரகத்தி லிடர்ப்பட்டோம் நடலை யில்லோம்
ஏமாப்போம் பிணியறியோம் பணிவோ மல்லோம்
இன்பமே எந்நாளுந் துன்பமில்லை
தாமார்க்குங் குடியல்லாத் தன்மையான
சங்கரன்நற் சங்கவெண் குழையோர் காதிற்
கோமாற்கே நாமென்றும் மீளா ஆளாய்க்
கொய்ம்மலர்ச் சேவடியிணையே குறுகினோமே. 1

அகலிடமே இடமாக ஊர்கள் தோறும்
அட்டுண்பார் இட்டுண்பார் விலக்கார் ஐயம்
புகலிடமாம் அம்பலங்கள் பூமிதேவியுடன் கிடந்தாற்
புரட்டாள்பொய் யன்றுமெய்யே
இகலுடைய விடையுடையான் ஏன்று கொண்டான்
இனியேதுங் குறைவிலோம் இடர்கள் தீர்ந்தோம்
துகிலுடுத்துப் பொன்பூண்டு திரிவார் சொல்லுஞ்
சொற் கேட்கக் கடவோமே துரிசற் றோமே. 2

www.saivamonline.com

வாராண்ட கொங்கையர்சேர் மனையிற் சேரோம்
மாதே வாமாதேவா என்று வாழ்த்தி
நீராண்ட புரோதாயம் ஆடப் பெற்றோம்
நீறணியுங்கோலமே நிகழப்பெற்றோம்
காராண்ட மழைபோலக் கண்ணீர் சோரக்
கன்மனமே நன்மனமாக் கரையப் பெற்றோம்
பாராண்டு பகடேறி வருவார் சொல்லும்
பணிகேட்கக் கடவோமோ பற்றற் றோமே. 3

உறவாவார் உருத்திரபல் கணத்தி னோர்கள்
உடுப்பன கோவணத் தொடுகீ ளுளவா மன்றே
செறுவாருஞ் செற மாட்டார் தீமை தானும்
நன்மையாய்ச் சிறப்பதேபிறப்பிற் செல்லோம்
நறவார் பொன் னிதழிநறுந் தாரோன் சீரார்
நமச்சிவா யஞ்சொல்ல வல்லோம் நாவால்
சுறவாருங் கொடி யானைப் பொடியாக் கண்ட
சுடர்நயனச் சோதியையே தொடர்வுற் றோமே. 4

என்றும்நாம் யாவர்க்கும் இடைவோ மல்லோம்
இருநிலத்தில் எமக்கெதிரா வாருமில்லை
சென்றுநாம் சிறுதெய்வம் சேர்வோ மல்லோம்
சிவபெருமான் திருவடியே சேரப்பெற்றோம்
ஒன்றினாற் குறையுடையோமல்லோ மன்றே
உறுபிணியார் செறலொழிந்திட் டோடிப் போனார்
பொன்றினார் தலைமாலை அணிந்த சென்னிப்
புண்ணியனை நண்ணிய புண்ணியத்து ளோமே. 5

மூவுருவின் முதலுருவாய் இருநான் கான
மூர்த்தியே என்று முப்பத்து மூவர்
தேவர்களும் மிக்கோருஞ் சிறந்து வாழ்த்துஞ்
செம்பவளத் திருமேனிச் சிவனே என்னும்
நாவுடையார் நமையாள வுடையா ரன்றே
நாவலந்தீ வகத்தினுக்கு நாத ரான
காவலரே யேவி விடுத்தாரேனுங் கடவமலோங்
கடுமையொடு களவற் றோமே. 6

www.saivamonline.com

நிற்பனவும் நடப்பனவும் நிலனும் நீரும்
நெருப்பி னொடு காற்றாகி நெடுவானாகி
அற்பமொடு பெருமையுமாய் அருமையாகி
அன்புடையார்க் கெளிமையதாய் அளக்க லாகாத்
தற்பரமாய்ச் சதாசிவமாய்த் தானும் யானும்
ஆகின்ற தன்மையனை நன்மையோடும்
பொற் புடைய பேசக் கடவோம் பேயர்
பேசுவன பேசுதுமோ பிழையற் றோமே. 7

ஈசனைஎவ் வுலகினுக்கும் இறைவன் தன்னை
இமையவர் தம் பெருமானை எரியாய் மிக்க
தேசனைச் செம்மேனி வெண்ணீற்றானைச்
சிலம்பரையன் பொற்பாவை நலஞ் செய்கின்ற
நேசனை நித்தலும் நினையப் பெற்றோம்
நின்றுண்பாரெம்மை நினையச் சொன்ன
வாசக மெல்லாம் மறந்தோ மன்றே
வந்தீரார் மன்னவனா வான்றா னாரே. 8

சடையுடையான் சங்கக் குழையோர் காதன்
சாம்பலும் பாம்பும் அணிந்தமேனி
விடையுடையான் வேங்கை அதன் மேலாடை
வெள்ளிபோற் புள்ளியுழை மால்தோல்சார்ந்த
உடையுடையான் நம்மை யுடையான் கண்டீர்
உம்மோடு மற்று முளராய் நின்ற
படையுடையான் பணி கேட்கும் பணியோமல்லோம்
பாசமற வீசும் படியோ நாமே. 9

நாவார நம்பனையே பாடப் பெற்றோம்
நாணற்றார் நள்ளாமே விள்ளப் பெற்றோம்
ஆவாஎன் றெமையாள்வான் அமரர் நாதன்
அயனொடுமாற் கறிவரிய அனலான் நீண்ட
தேவாதி தேவன் சிவனென் சிந்தை சேர்ந்திருந்தான்
தென்திசைக்கோன் தானே வந்து
கோவாடிக் குற்றேவல் செய்கென் றாலுங்
குணமாகக் கொள்ளோ மெண்குணத்து ளோமே. 10

திருச்சிற்றம்பலம்

www.saivamonline.com

## 17. உடல் உறுப்புக்கள் உறுதி பெறவும், அவற்றின் இயக்கங்கள் சீராக அமையவும், அவற்றின் உதவியால் இறைவன் திருவருளைப் பெற்று உய்யவும், அவற்றை நம் ஏவல்வழிப் பணி கொள்ளவும் ஓத வேண்டிய பதிகம்

இதனைத் திரு அங்கமாலை என்று குறித்துள்ளனர்

ஆசிரியர் : திருநாவுக்கரசர்
பண் : சாதாரி, பொதுப்பதிகம்
இராகம் : பந்துவராளி

திருச்சிற்றம்பலம்

தலையே நீவணங்காய் - தலை
மாலை தலைக்கணிந்து
தலையாலேபலி தேருந் தலைவனைத்
தலையே நீ வணங்காய். 1

கண்காள் காண்மின்களோ - கடல்
நஞ்சுண்ட கண்டன் தன்னை
எண்டோள் வீசிநின் றாடும் பிரான்றன்னைக்
கண்காள்காண் மின்களோ. 2

செவிகாள் கேண்மின்களோ - சிவன்
எம்மிறை செம்பவள
எரிபோல் மேனிப்பி ரான்திறம் எப்போதுஞ்
செவிகாள் கேண்மின் களோ. 3

மூக்கே நீமுரலாய் - முது
காடுறை முக்கணனை
வாக்கே நோக்கிய மங்கை மணாளனை
மூக்கே நீமுரலாய். 4

www.saivamonline.com

வாயே வாழ்த்து கண்டாய் - மத
யானை யுரிபோர்த்துப்
பேய்வாழ் காட்டகத் தாடும்பிரான் தன்னை
வாயே வாழ்த்து கண்டாய். 5

நெஞ்சே நீ நினையாய் - நிமிர்
புன்சடை நின்ம லனை
மஞ்சாடும்மலை மங்கை மணாளனை
நெஞ்சே நீநினையாய். 6

கைகாள் கூப்பித்தொழீர் - கடி
மாமலர் தூவிநின்று
பைவாய்ப் பரம்பரை யார்த்த பரமனைக்
கைகாள் கூப்பித் தொழீர். 7

ஆக்கை யாற்பயனென் - அரன்
கோயில் வலம்வந்து
பூக்கையால் அட்டிப் போற்றி யென்னாதஇவ்
ஆக்கையாற் பயனென். 8

கால்க ளாற்பயனென் - கறைக்
கண்டனுறை கோயில்
கோலக் கோபுரக் கோகரணஞ் சூழாக்
கால்க ளாற் பயனென். 9

உற்றா ராருளரோ - உயிர்
கொண்டு போம்பொழுது
குற்றாலத் துறை கூத்தனல் லால்நமக்
குற்றார் ஆரு ளரோ. 10

இறுமாந் திருப்பன் கொலோ - ஈசன்
பல்கணத்தெண்ணப் பட்டுச்
சிறுமா னேந்திதன் சேவடிக்கீழ்ச் சென்றங்
கிறுமாந்திருப்பன் கொலோ. 11

www.saivamonline.com

தேடிக் கண்டு கொண்டேன்
திரு மாலொடு நான் முகனும்
தேடித் தேடொணாத் தேவனை என்னுளே
தேடிக் கண்டு கொண்டேன். 12

திருச்சிற்றம்பலம்

www.saivamonline.com

## 18. நம் உடல் உறுப்புக்களின் மேல் வரும் நோய்களின் கடுமையிலிருந்து விடுபட்டு நலம் பெறவும், பழவினையும், இம்மையில் நாம் செய்த தீவினையும் துன்பந்தராது காத்தருளவும் திருக்கேதீச்சரத்து அமர்ந்த சிவனை வணங்கி ஓதி உய்தி பெறும் பதிகம்!

ஆசிரியர் : சுந்தரமூர்த்தி சுவாமிகள்
பண் : நட்டபாடை
இராகம் : கம்பீரநாட்டை
தலம் : திருக்கேதீச்சரம்

திருச்சிற்றம்பலம்

நத்தார்புடை ஞானம்பசு ஏறிந்தனை கவிழ்வாய்
மத்தம்மத யானைஉரி போர்த்தமழு வாளன்
பத்தாகிய தொண்டர்தொழு பாலாவியின் கரைமேல்
செத்தார்எலும் பணிவான்திருக் கதீச்சரத் தானே. 1

சுடுவார்பொடி நீறுந்நல துண்டப்பிறைக் கீளும்
கடமார்களி யானைஉரி அணிந்தகறைக் கண்டன்
படவேரிடை மடவாளொடு பாலாவியின் கரைமேல்
திடமாஉறை கின்றான்திருக் கேதீச்சரத் தானே. 2

அங்கம்மொழி அன்னாரவர் அமரர்தொழு தேத்த
வங்கம்மலி கின்றகடல் மாதோட்டநன் னகரில்
பங்கஞ்செய்த பிறைசூடினன் பாலாவியின் கரைமேல்
செங்கண்ணர வசைத்தான்திருக் கேதீச்சரத் தானே. 3

கரியகறைக் கண்டனல்ல கண்மேல்ஒரு கண்ணான்
வரியசிறை வண்டியாழ்செயும் மாதோட்டநன் னகருள்
பரியதிரை எறியாவரு பாலாவியின் கரைமேல்
தெரியும்மறை வல்லான் திருக் கேதீச்சரத் தானே. 4

www.saivamonline.com

அங்கத்துறு நோய்கள்ளடி யார்மேல்ஒழித் தருளி
வங்கம்மலி கின்றகடல் மாதோட்டநன் னகரில்
பங்கஞ்செய்த மடவாளொடு பாலாவியின் கரைமேல்
தெங்கம்பொழில் சூழ்ந்ததிருக் கேதீச்சரத் தானே. 5

வெய்யவினை யாயஅடி யார்மேல்ஒழித் தருளி
வையம்மலி கின்றகடல் மாதோட்டநன் னகரில்
பையோர் இடை மடவாளொடு பாலாவியின் கரைமேல்
செய்யசடை முடியான்திருக் கேதீச்சரத் தானே. 6

ஊனத்துறு நோய்கள்ளடி யார்மேல்ஒழித் தருளி
வானத்துறு மலியுங்கடல் மாதோட்டநன் னகரில்
பானத்துறும் மொழியாளொடு பாலாவியின் கரைமேல்
ஏனத்தெயி றணிந்தான்திருக் கேதீச்சரத் தானே. 7

அட்டன்னழ காகவ்வரை தன்மேல்அர வார்த்து
மட்டுண்டுவண் டாலும்பொழில் மாதோட்டநன் னகரில்
பட்டவ்வரி நுதலாளொடு பாலாவியின் கரைமேல்
சிட்டன்நமை ஆள்வான்திருக் கேதீச்சரத் தானே. 8

மூவரென இருவரென முக்கண்ணுடை மூர்த்தி
மாவின்கனி தூங்கும்பொழில் மாதோட்டநன் னகரில்
பாவம்வினை அறுப்பார்பயில் பாலாவியின் கரைமேல்
தேவன்னெனை ஆள்வான்திருக் கேதீச்சரத் தானே. 9

கறையார்கடல் சூழ்ந்தகழி மாதோட்டநன் னகருள்
சிறையார்பொழில் வண்டியாழ்செயுங் கேதீச்சரத்தானை
மறையார்புகழ் ஊரன்னடித் தொண்டன்னுரை செய்த
குறையாத்தமிழ் பத்துஞ்சொலக் கூடாகொடு வினையே. 10

திருச்சிற்றம்பலம்

www.saivamonline.com

## 19. தீராத வயிற்று நோய் நீங்கவும், திசைமாறி, கால்போன போக்கில் போனதால் ஏற்பட்ட திருவருள் குற்றத்திலிருந்து விடுபடவும் ஓத வேண்டிய பதிகம்

திருவதிகை வீரட்டானத்தில் சிவனைப் பணிந்து பாடி திருநாவுக்கரசர் சூலைநோய் நீங்கப் பெற்றது.

ஆசிரியர் : திருநாவுக்கரசர்
பண் : கொல்லி
இராகம் : நவரோசு
தலம் : திருவதிகை

திருச்சிற்றம்பலம்

கூற்றாயின வாறு விலக்ககிலீர்
கொடுமை பல செய்தன நானறியேன்
ஏற்றா யடிக்கே இரவும் பகலும்
பிரியாது வணங்குவன் எப்பொழுதும்
தோற்றாதென் வயிற்றின் அகம்படியே
குடரோடு துடக்கி முடக்கியிட
ஆற்றேன் அடியேன் அதிகைக் கெடில
வீரட்டானத் துறை அம்மானே. 1

நெஞ்சம்உமக் கேயிட மாகவைத்தேன்
நினையாதொரு போதும் இருந்தறியேன்
வஞ்சம்மிது வொப்பது கண்டறியேன்
வயிற்றோடு துடக்கி முடக்கியிட
நஞ்சாகி வந்தென்னை நலிவதனை
நணுகாமல் துரந்து கரந்துமிடீர்
அஞ்சேலுமென் னிர்அதி கைக் கெடில
வீரட்டா னத்துறை அம்மானே. 2

www.saivamonline.com

பணிந்தாரன பாவங்கள் பாற்ற வல்லீர்
படுவெண்டலை யிற்பலி கொண்டுழல்வீர்
துணிந்தேயுமக் காட்செய்து வாழலுற்றால்
சுடுகின்றது சூலை தவிர்த்தருளீர்
பிணிந்தார் பொடி கொண்டுமெய் பூசவல்லீர்
பெற்றமேற்றுகந் தீர்சுற்றும் வெண்டலை கொண்டு
அணிந்தீர்அடி கேள்அதி கைக்கெடில
வீரட்டானத்துறை அம்மானே. 3

முன்னம்மடி யேன்அறியாமையினால்
முனிந்தென்னை நலிந்து முடக்கியிடப்
பின்னையடி யேனுமக் காளும்பட்டேன்
சுடுகின்றது சூலை தவிர்த்தருளீர்
தன்னையடைந் தார் வினை தீர்ப்பதன்றோ
தலையாயவர் தங்கட னாவதுதான்
அன்னநடை யார் அதி கைக்கெடில
வீரட்டா னத்துறை அம்மானே. 4

காத்தாள்பவர் காவல் இகழ்ந்தமையாற்
கரைநின்றவர் கண்டுகொளென்று சொல்லி
நீத்தாயகயம்புக நூக்கியிட நிலைக்கொள்ளும்
வழித்துறை யொன்றறியேன்
வார்த்தையிதுவொப்பது கேட்டறியேன்
வயிற்றோடு துடக்கி முடக்கியிட
ஆர்த்தார்புன லார்அதி கைக்கெடில
வீரட்டா னத்துறை அம்மானே. 5

சலம்பூவொடு துபம் மறந்தறியேன்
தமிழோடிசை பாடல் மறந்தறியேன்
நலந்தீங்கிலும் உன்னை மறந்தறியேன்
உன்னாமம் என்நாவில் மறந்தறியேன்
உலாந்தார்தலை யில்பலி கொண்டுழல்வாய்
உடலுள்ளுறு சூலை தவிர்த்தருள்வாய்
அலந்தேன்அடியேன் அதிகைக்கெடில
வீரட்டானத்துறை அம்மானே. 6

www.saivamonline.com

உயர்ந்தேன்மனை வாழ்க்கையும் ஒண்பொருளும்
ஒருவர் தலைகாவலி லாமையினால்
வயந்தேயுமக் காட்செய்து வாழலுற்றால்
வலிக்கின்றது சூலை தவிர்த்தருளீர்
பயந்தேயென் வயிற்றினகம் படியே
பறித்துப்புரட் டியறுத் தீர்த்திடநான்
அயர்ந்தேன் அடி யேன்அதி கைக்கெடில
வீரட்டானத்துறை அம்மானே. 7

வலித்தேன்மனை வார்க்கை மகிழ்ந்தடியேன்
வஞ்சம்மனமொன்று மிலாமையினால்
சலித்தாலொரு வர்துணை யாருமில்லைச்
சங்க வெண்குழைக் காதுடை எம்பெருமான்
கலித்தேயென் வயிற்றி னகம்படியே
கலக்கிமலக் கிட்டுக் கவர்ந்து தின்ன
அலுத்தேன்அடி யேன்அதி கைக்கெடில
வீரட்டா னத்துறை அம்மானே. 8

பொன்போல மிளிர்வதொர் மேனியினீர்
புரிபுன்சடை யீர்மெலி யும்பிறையீர்
துன்பேகவ லைபிணி யென்றிவற்றை
நணுகாமல் துரந்து கரந்துமிடீர்
என்பே லிகளும்மை இனித்தெளியார்
அடியார்படு வதிது வேயாகில்
அன்பே அமை யும்மதி கைக்கெடில
வீரட்டா னத்துறை அம்மானே. 9

போர்த்தாயங்கொ ரானையின் ஈருரிதோல்
புறங்காடரங் காநட மாடவல்லாய்
ஆர்த்தானரக் கன்றனை மால் வரைக்கீழ்
அடர்த்திட்டருள் செய்த வதுகருதாய்
வேர்த்தும்புரண் டும்விழுந் தும்மெழுந்தால்
என்வேதனை யான விலக்கியிடாய்
ஆர்த்தார் புனல் சூர்அதி கைக்கெடில
வீரட்டா னத்துறை அம்மானே. 10

திருச்சிற்றம்பலம்

www.saivamonline.com

## 20. மருந்துகளுக்கெல்லாம் கட்டுப்படாத வெப்புநோய்களும், சுரநோய்களும் அகல ஓத வேண்டிய பதிகம்

கூன் பாண்டியனது வெப்பு நோயைத் திருஞானசம்பந்தர் இப்பதிகம் ஓதி திருநீறு அருளித்து நீக்கி அருளினார்.

ஆசிரியர் : திருஞானசம்பந்தர்
பண் : காந்தாரம்
இராகம் : நவரோசு
தலம் : ஆலவாய் (மதுரை)

திருச்சிற்றம்பலம்

மந்திரம் ஆவது நீறு; வானவர் மேலது நீறு;
சுந்தரம் ஆவது நீறு; துதிக்கப் படுவது நீறு;
தந்திரம் ஆவது நீறு; சமயத்தில் உள்ளது நீறு;
செந்துவர் வாய் உமை பங்கன், திரு ஆலவாயான்
திருநீறே. 1

வேதத்தில் உள்ளது நீறு; வெந்துயர் தீர்ப்பது நீறு;
போதம் தருவது நீறு; புன்மை தவிர்ப்பது நீறு;
ஓதத் தகுவது நீறு; உண்மையில் உள்ளது நீறு;
சீதப் புனல் வயல் சூழ்ந்த திரு ஆலவாயான் திருநீறே. 2

முத்தி தருவது நீறு; முனிவர் அணிவது நீறு;
சத்தியம் ஆவது நீறு; தக்கோர் புகழ்வது நீறு;
பத்தி தருவது நீறு; பரவ இனியது நீறு;
சித்தி தருவது நீறு; திரு ஆலவாயான் திருநீறே. 3

காண இனியது நீறு; கவினைத் தருவது நீறு;
பேணி அணிபவர்க்கு எல்லாம் பெருமை கொடுப்பது நீறு;
மாணம் தகைவது நீறு; மதியைத் தருவது நீறு;
சேணம் தருவது நீறு; திரு ஆலவாயான் திருநீறே. 4

பூசஇனியது நீறு; புண்ணியம் ஆவது நீறு;
பேசஇனியது நீறு; பெருந்தவத் தோர்களுக்கு எல்லாம்
ஆசை கெடுப்பது நீறு; அந்தம்அது ஆவது நீறு;
தேகம் புகழ்வது நீறு; திரு ஆலவாயான் திருநீறே. 5

அருத்தம் அது ஆவது நீறு; அவலம் அறுப்பது நீறு;
வருத்தம் தணிப்பது நீறு; வானம் அளிப்பது நீறு;
பொருத்தம் அது ஆவது நீறு; புண்ணியர் பூசும் வெண்ணீறு
திருத்தகு மாளிகை சூழ்ந்த திரு ஆலவாயான் திருநீறே. 6

எயில் அது அட்டது நீறு; இருமைக்கும் உள்ளது நீறு;
பயிலப் படுவது நீறு; பாக்கியம் ஆவது நீறு;
துயிலைத் தடுப்பது நீறு; சுத்தம் அது ஆவது நீறு;
அயிலைப் பொலிதரு சூலத்து ஆலவாயான் திருநீறே. 7

இராவணன் மேலது நீறு; எண்ணத் தகுவது நீறு;
பராவணம் ஆவது நீறு; பாவம் அறுப்பது நீறு;
தராவணம் ஆவது நீறு; தத்துவம் ஆவது நீறு;
அரா வணங்கும் திருமேனி ஆலவாயான் திருநீறே. 8

மாலொடு அயன் அறியாத வண்ணமும் உள்ளது நீறு;
மேல் உறை தேவர்கள் தங்கள் மெய்யது வெண் பொடிநீறு;
ஏல உடம்பு இடர் தீர்க்கும்; இன்பம் தருவது நீறு;
ஆலம் அது உண்ட மிடற்று, எம் ஆலவாயான் திருநீறே. 9

குண்டிகைக் கையர்களோடு சாக்கியர் கூட்டமும் கூட
கண் திகைப்பிப்பது நீறு; கருத இனியது நீறு;
எண்திசைப் பட்ட பொருளார் ஏத்தும் தகையது நீறு;
அண்டத்தவர் பணிந்து ஏத்தும் ஆலவாயான் திருநீறே. 10

www.saivamonline.com

ஆற்றல் அடல் விடை ஏறும் ஆலவாயான் திருநீற்றைப்
போற்றிப், புகலி நிலாவும் பூசுரன் ஞான சம்பந்தன்
தேற்றித், தென்னன் உடல் உற்ற தீப்பிணி ஆயினதீரச்
சாற்றிய பாடல்கள் பத்தும் வல்லவர் நல்லவர் தாமே. 11

திருச்சிற்றம்பலம்

www.saivamonline.com

## 21. குளிர் சுரம் முதலிய உடல் நோய் நீங்கவும், முற்பிறப்பில் செய்த தீவினையால் வரும் துன்பம் அகலவும், நம் மேல் பிறர் ஏவிய பில்லி, சூன்யம், ஏவல் முதலியன நீங்கவும் ஓத வேண்டிய பதிகம்

திருநீலகண்டம் என்ற மந்திரத்தின் சிறப்பு உரைப்பது. திருச்செங்கோட்டில், அடியவர்களுக்கு உற்ற நளிர் சுரம் நீங்கத் திருஞானசம்பந்தர் பாடியது.

ஆசிரியர் : திருஞானசம்பந்தர்
பண் : வியாழக்குறிஞ்சி
இராகம் : சௌராஷ்டிரம்
தலம் : திருச்செங்கோடு

திருச்சிற்றம்பலம்

அவ்வினைக்கு இவ்வினை ஆம் என்று
சொல்லும் அஃது அறிவீர்;
உய்வினை நாடாது இருப்பதும்
உம்தமக்கு ஊனம் அன்றே?
கைவினை செய்து எம்பிரான்
கழல் போற்றதும்; நாம் அடியோம்;
செய்வினை வந்து எமைத் தீண்டப்
பெறா; திருநீலகண்டம். 1

காவினை இட்டும் குளம்பல
தொட்டும், கனி மனத்தால்
ஏ வினையால் எயில் மூன்று
எரித்தீர் என்று இருபொழுதும்
பூவினைக் கொய்து, மலர்அடி
போற்றுதும், நாம் அடியோம்
தீவினை வந்து எமைத்
தீண்டப்பெறா; திருநீலகண்டம். 2

www.saivamonline.com

முலைத்தடம் மூழ்கிய போகங்களும்
மற்று எவையும் எல்லாம்
விலைத்தலை ஆவணம் கொண்டு
எமை ஆண்ட விரிசடையீர்
இலைத்தலைச் சூலமும் தண்டும்
மழுவும் இவை உடையீர்
சிலைத்து எமைத் தீவினை தீண்டப்
பெறா; திருநீலகண்டம். 3

விண்உலகு ஆள்கின்ற
விச்சாதரர்களும் வேதியரும்
'புண்ணியர்' என்று இருபோதும்
தொழப்படும் புண்ணியரே
கண் இமையாதன மூன்று உடையீர்!
உம்கழல் அடைந்தோம்
திண்ணிய தீவினை தீண்டப்
பெறா; திருநீலகண்டம். 4

மற்று இணை இல்லா மலை திரண்டு
அன்ன திண்தோள் உடையீர்;
கிற்று எமை ஆட்கொண்டு கேளாது
ஒழிவதும் தன்மை கொல்லோ?
சொற்றுணை வாழ்க்கை துறந்து,
உம் திருவடியே அடைந்தோம்
செற்று எமைத் தீவினை தீண்டப்
பெறா; திருநீலகண்டம். 5

மறக்கும் மனத்தினை மாற்றி, எம்
ஆவியை வற்புறுத்திப்
பிறப்பு இல் பெருமான், திருந்து
அடிக்கீழ்ப் பிழையாத வண்ணம்,
பறித்த மலர்கொடு வந்து, உமை
ஏத்தும் பணி அடியோம்;
சிறப்பு இலித் தீவினை தீண்டப்பெறா;
திருநீலகண்டம். 6-7

www.saivamonline.com

கருவைக் கழித்திட்டு, வாழ்க்கை
கடிந்து, உம்கழல் அடிக்கே,
உருகி மலர்கொடு வந்து உமை
ஏத்துதும்; நாம் அடியோம்;
செருவில் அரக்கனைச் சீரில்
அடர்த்து அருள்செய்தவரே,
திருஇலித் தீவினை தீண்டப் பெறா;
திரு நீலகண்டம். 8

நாற்றமலர் மிசை நான்முகன்
நாரணன் வாது செய்து,
தோற்றம் உடைய அடியும் முடியும்
தொடர்வு அரியீர்;
தோற்றினும் தோற்றும்; தொழுது
வணங்குதும்; நாம் அடியோம்
சீற்றம் அது ஆம் வினை தீண்டப்பெறா;
திரு நீலகண்டம். 9

சாக்கியப் பட்டும் சமண் உரு
ஆகி உடை ஒழிந்தும்
பாக்கியம் இன்றி இருதலைப்
போகமும் பற்றும் விட்டார்;
பூக்கமழ் கொன்றைப் புரிசடையீர்;
அடி போற்றுகின்றோம்;
தீக்குழித் தீவினை தீண்டப்
பெறா; திருநீலகண்டம். 10

பிறந்த பிறவியில் பேணி எம்
செல்வன் கழல் அடைவான்
இறந்த பிறவி உண்டாகில்
இமையவர் கோன் அடிக்கண்
திறம்பயில் ஞானசம்பந்தன் செந்தமிழ்
பத்தும் வல்லார்
நிறைந்த உலகினில் வானவர்
கோனொடும் கூடுவரே. 11

திருச்சிற்றம்பலம்

www.saivamonline.com

## 22. மருந்தும் இல்லை - காப்பாற்ற வேறு மார்க்கமும் இல்லை என்று கைவிடப்பட்ட, இன்னநோய் என்று அறியாது துன்புறும்போது 'சிவனே கதி' என்று நம்பிக்கையுடன் ஓதி உய்திபெறும் பதிகம்

கொல்லிமழவன் என்ற மன்னன் மகளைப் பற்றியிருந்த முயலக நோய் நீங்கத் திருஞானசம்பந்தர் பாடியருளியது.

ஆசிரியர் : திருஞானசம்பந்தர்
பண் : தக்கராகம்
இராகம் : காம்போதி
தலம் : பாச்சிலாச்சிராமம்

திருச்சிற்றம்பலம்

துணிவளர் திங்கள் துளங்கி விளங்க,
சுடர்சடை சுற்றி முடித்து,
பணிவளர் கொள்கையர் பாரிடம் சூழ,
ஆரிடமும் பலி தேர்வர்;
அணிவளர் கோலம் எலாம் செய்து,
பாச்சிலாச் சிராமத்து உறைகின்ற
மணிவளர் கண்டரோ, மங்கையை வாட
மயல் செய்வதோ, இவர்மாண்பே? 1

கலைபுனை மான்உரி, தோல் உடை ஆடை,
கனல் சுடரால் இவர்கண்கள்,
தலைஅணி சென்னியர், தார்மணி மார்பர்,
தம்அடிகள் இவர் என்ன
அலைபுனல் பூம்பொழில் சூழ்ந்து அமர்
பாச்சிலாச் சிராமத்து உறைகின்ற
இலைபுனை வேலரோ, ஏழையை வாட,
இடர் செய்வதோ, இவர் ஈடே? 2

www.saivamonline.com

வெஞ்சுடர் ஆடுவர், துஞ்சுஇருள்;
மாலை வேண்டுவர், பூண்பது வெண்நூல்;
நஞ்சு அடை கண்டர்; நெஞ்சு
இடமாக நண்ணுவர், நம்மை நயந்து
மஞ்சு அடைமாளிகை, சூழ்தரு
பாச்சிலாச் சிராமத்து உறைகின்ற
செஞ்சுடர் வண்ணரோ, பைந்தொடி
வாடச் சிதை செய்வதோ இவர் சீரே? 3

கன மலர்க் கொன்றை அலங்கல்
இலங்கக் கனல்தரு தூ மதிக் கண்ணி
புனமலர் மாலை அணிந்து, அழகு
ஆய புனிதர் கொல்ஆம், இவர் என்ன,
அனம் மலி வண்பொழில் சூழ்தரு
பாச்சிலாச் சிராமத்து உறைகின்ற
மனம் மலி மைந்தரோ மங்கையை
வாட மயல் செய்வதோ, இவர் மாண்பே? 4

மாந்தர்தம் பால் நறுநெய் மகிழ்ந்து
ஆடி, வளர் சடைமேல் புனல்வைத்து
மோந்தை, முழா, குழல், தாளம் ஓர்
வீணை முதிர ஓர் வாய்மூரி பாடி,
ஆந்தை விழிச் சிறு பூதத்தர்,
பாச்சிலாச் சிராமத்து உறைகின்ற
சாந்து அணி மார்பரோ, தையலை வாடச்
சதுர் செய்வதோ, இவர் சார்வே? 5

நீறு மெய் பூசி, நிறை சடை தாழ,
நெற்றிக் கண்ணால் உற்றுநோக்கி
ஆறு அது சூடி, ஆடு அரவு ஆட்டி,
ஐவிரல் கோவண ஆடை
பால்தரு மேனியர்; பூதத்தர்,
பாச்சிலாச் சிராமத்து உறைகின்ற
ஏறுஅது ஏறியர், ஏழையை வாட, இடர்
செய்வதோ இவர் ஈடே? 6

www.saivamonline.com

பொங்கு இள நாகம், ஏர் ஏகவடத்தோடு
ஆமை வெண்நூல், புனைகொன்றை
கொங்கு இள மாலை புனைந்து அழகு ஆய,
குழகர் கொல் ஆம், இவர் என்ன
அங்கு இள மங்கை ஓர் பங்கினர்;
பாச்சிலாச் சிராமத்து உறைகின்ற
சங்குஒளி வண்ணரோ, தாழ்குழல் வாடச்
சதிர் செய்வதோ இவர்சார்வே? 7

ஏவலத்தால் விசயற்கு அருள் செய்து,
இராவணன் தன்னை ஈடு அழித்து,
மூவரிலும் முதல் ஆய், நடு ஆய
மூர்த்தியை அன்றி மொழியாள்;
யாவர்களும் பரவும் எழில்
பாச்சிலாச் சிராமத்து உறைகின்ற
தேவர்கள் தேவரோ, சேயிழை வாடச்
சிதை செய்வதோ, இவர் சோர்வே? 8

மேலது நான்முகன் எய்தியது இல்லை;
கீழது சேவடி தன்னை
நீலது வண்ணனும் எய்தியது இல்லை;
என இவர் நின்றதும் அல்லால்
ஆல்அது மாமதி தோய்பொழில்
பாச்சிலாச் சிராமத்து உறைகின்ற
பால்அது வண்ணரோ பைந்தொடி வாடப்
பழிசெய்வதோ, இவர் பண்பே? 9

நாணொடு கூடிய சாயினரேனும் நகுவர்,
அவர் இருபோதும்;
ஊணொடு கூடிய உட்கும் தகையார் உரைகள்
அவை கொள வேண்டா;
ஆணொடு பெண்வடிவு ஆயினர்,
பாச்சிலாச் சிராமத்து உறைகின்ற
பூண்நெடு மார்பரோ, பூங்கொடி வாடப்
புனை செய்வதோ, இவர் பொற்பே? 10

www.saivamonline.com

அகம்மலி அன்பொடு தொண்டர் வணங்க,
ஆச்சிராமத்து உறைகின்ற
புகைமலி மாலை புனைந்து, அழகு ஆய
புனிதர் கொல் ஆம் இவர் என்ன,
நகைமலி தண் பொழில் சூர்தர
காழி நற்றமிழ் ஞானசம்பந்தன்
தகைமலி தண்தமிழ் கொண்டு இவை
ஏத்த, சாரகிலா வினைதானே. 11

திருச்சிற்றம்பலம்

www.saivamonline.com

## 23. கண்கள் ஒளிபெறவும், கண்களில் வரும் நோய்கள் யாவும் அகலவும் ஓத வேண்டிய பதிகம்

இரண்டு கண் பார்வையையும் இழந்து வருந்திய சுந்தரமூர்த்தி சுவாமிகள் இடக்கண் பார்வை மீண்டபோது மகிழ்ந்து பாடியது.

ஆசிரியர் : சுந்தரமூர்த்தி சுவாமிகள்
பண் : தக்கேசி
இராகம் : காம்போதி
தலம் : காஞ்சிபுரம்

திருச்சிற்றம்பலம்

ஆலம் தான் உகந்து அமுது செய்தானை,
ஆதியை அமரர் தொழுது ஏத்தும்
சீலம்தான் பெரிதும் உடையானைச்
சிந்திப்பார் அவர் சிந்தை உளானை
ஏலவார் குழலாள் உமை நங்கை
என்றும் ஏத்தி வழிபடப் பெற்ற
கால காலனைக் கம்பன் எம்மானைக்
காணக் கண் அடியேன் பெற்றவாறே. 1

உற்றவர்க்கு உதவும் பெருமானை
ஊர்வது ஒன்று உடையான், உம்பர்கோனை
பற்றினார்க்கு என்றும் பற்றவன் தன்னைப்
பாவிப்பார் மனம் பாவிக் கொண்டானை
அற்றம்இல் புகழாள், உமை நங்கை
ஆதரித்து வழிபடப் பெற்ற
கற்றைவார் சடைக் கம்பன் எம்மானைக்
காணக் கண் அடியேன் பெற்றவாறே. 2

www.saivamonline.com

திரியும் முப்புரம் தீப்பிழம்பு ஆகச்
செங்கண் மால்விடை மேல் திகழ்வானைக்
கரியின் ஈர்உரி போர்த்து உகந்தானைக்
காமனைக் கனலா விழித்தானை
வரிகொள் வெள்வளையாள் உமை நங்கை
மருவி ஏத்தி வழிபடப் பெற்ற
பெரிய கம்பனை, எங்கள் பிரானைக்
காணக் கண் அடியேன் பெற்றவாறே. 3

குண்டலம் திகழ் காது உடையானை
கூற்று உதைத்த கொடுந் தொழிலானை
வண்டு அலம்பும் மலர்க் கொன்றையினானை
வாள்அரா மதிசேர் சடையானை
கெண்டை அம் தடங்கண் உமை நங்கை
கெழுமி ஏத்தி வழிபடப் பெற்ற
கண்டம் நஞ்சு உடைக் கம்பன் எம்மானைக்
காணக் கண் அடியேன் பெற்றவாறே. 4

வெல்லும் வெண்மழு ஒன்று உடையானை,
வேலை நஞ்சு உண்ட வித்தகன் தன்னை,
அல்லல் தீர்த்த அருள் செய்ய வல்லானை,
அருமறை அவை அங்கம் வல்லானை,
எல்லை இல் புகழாள் உமை நங்கை
என்றும் ஏத்தி வழிபடப் பெற்ற
நல்ல கம்பனை எங்கள் பிரானைக்
காணக் கண் அடியேன் பெற்றவாறே. 5

திங்கள் தங்கிய சடை உடையானை,
தேவ தேவனை, செழுங்கடல் வளரும்
சங்க வெண்குழைக் காது உடையானை,
சாம வேதம் பெரிது உகப்பானை
மங்கை நங்கை மலைமகள் கண்டு
மருவி ஏத்தி வழிபடப் பெற்ற
கங்கை யாளனைக் கம்பன் எம்மானைக்
காணக் கண் அடியேன் பெற்றவாறே. 6

www.saivamonline.com

விண்ணவர் தொழுது ஏத்த நின்றானை,
வேதம்தான் விவரித்து ஓத வல்லானை,
நண்ணினார்க்கு என்றும் நல்லவன்தன்னை,
நாளும் நாம் உகக்கின்ற பிரானை,
எண்இல் தொல் புகழாள் உமை நங்கை
என்றும் ஏத்தி வழிபடப் பெற்ற
கண்ணும் மூன்றுஉடைக் கம்பன் எம்மானைக்
காணக் கண் அடியேன் பெற்றவாறே. 7

சிந்தித்து என்றும் நினைந்து எழுவார்கள்
சிந்தையில் திகழும் சிவன் தன்னை
பந்தித்த வினைப் பற்று அறுப்பானை
பாலொடு ஆன் அஞ்சும் ஆட்டு உகந்தானை
அந்தம் இல் புகழாள் உமைநங்கை
ஆதரித்து வழிபடப் பெற்ற
கந்தவார் சடைக் கம்பன் எம்மானைக்
காணக் கண் அடியேன் பெற்றவாறே. 8

வரங்கள் பெற்று உழல், வாள் அரக்கர் தம்
வாலிய புரம் மூன்று எரித்தானை
நிரம்பிய தக்கன்தன் பெரு வேள்வி
நிரந்தரம் செய்த நிட்கண்டகனைப்
பரந்த தொல் புகழாள் உமை நங்கை
பரவிஏ த்தி வழிபடப் பெற்ற
கரங்கள் எட்டு உடைக் கம்பன் எம்மானைக்
காணக் கண் அடியேன் பெற்றவாறே. 9

எள்கல் இன்றி இமையவர் கோனை
ஈசனை வழிபாடு செய்வாள் போல்
உள்ளத்து உள்கி, உகந்து உமை நங்கை
வழிபடச் சென்று நின்றவா கண்டு
வெள்ளம் காட்டி வெருட்டிட அஞ்சி
வெருவி ஓடித்தழுவ வெளிப்பட்ட
கள்ளக் கம்பனை, எங்கள் பிரானைக்
காணக்கண் அடியேன் பெற்றவாறே. 10

www.saivamonline.com

பெற்றம் ஏறு உகந்து ஏற வல்லானை
 'பெரிய எம்பெருமான்' என்று எப்போதும்
கற்றவர் பரவப் படுவானைக்
 காணக் கண் அடியேன் பெற்றது என்று
கொற்றவன், கம்பன், கூத்தன் எம்மானைக்
 குளிர் பொழில், திரு நாவல் ஆரூரன்
நற்றமிழ் இவை ஈர்ஐந்தும் வல்லார்
 நன்னெறி உலகு எய்துவர்தாமே. 11

திருச்சிற்றம்பலம்

www.saivamonline.com

## 24. நவக்கிரகங்களின் ஆட்சியாலும், பெயர்ச்சியாலும், தீய பார்வையாலும், பிறவகையாலும் வரும் துன்பங்கள் அனைத்தும் நீங்க ஓத வேண்டிய பதிகம்

நவக்கிரகதோஷம்,, நட்சத்திர தோஷம், சிறுதெய்வக் குற்றம், எமபயம், இயற்கைச் சீற்றமும், விலங்குகளின் கொடுமை, பல்வகை கொடுநோய்கள் முதலானவற்றிலிருந்து விடுபட ஓத வேண்டியது.

ஆசிரியர் : திருஞானசம்பந்தர்
பண் : பியந்தைக்காந்தாரம்
இராகம் : நவரோசு
தலம் : திருமறைக்காடு

திருச்சிற்றம்பலம்

வேயுறு தோளி பங்கன் விடம் உண்ட கண்டன்
மிக நல்ல வீணை தடவி,
மாசறு திங்கள் கங்கை முடிமேல் அணிந்து, என்
உளமே புகுந்த அதனால்
ஞாயிறு, திங்கள், செவ்வாய், புதன், வியாழம், வெள்ளி,
சனி, பாம்பு இரண்டும் உடனே
ஆசுஅறும்; நல்ல நல்ல; அவை நல்ல நல்ல,
அடியார் அவர்க்கு மிகவே. 1

என்பொடு கொம்பொடு ஆமை இலை மார்பு இலங்க
எருது ஏறி, ஏழை உடனே,
பொன்பொதி மத்த மாலை புனல்சூடி வந்து, என்
உளமே புகுந்த அதனால்
ஒன்பதொடு ஒன்றோடு ஏழு பதினெட்டொடு, ஆறும்,
உடனாய நாள்கள் அவைதாம்

www.saivamonline.com

அன்பொடு நல்லநல்ல; அவை நல்லநல்ல
அடியார் அவர்க்கு மிகவே. 2

உருவளர் பவளமேனி ஒளிநீறு அணிந்து
உமையோடும், வெள்ளை விடைமேல்,
முருகு அலர்கொன்றை திங்கள் முடிமேல் அணிந்து என்
உளமே புகுந்த அதனால்
திருமகள், கலை அது ஊர்தி, செயமாது, பூமி,
திசை தெய்வம் ஆன பலவும்,
அருநெதி நல்ல நல்ல; அவை நல்ல நல்ல,
அடியார் அவர்க்கு மிகவே. 3

மதி நுதல் மங்கையோடு, வடஆல் இருந்து
மறை ஓதும் எங்கள் பரமன்,
நதியொடு கொன்றைமாலை முடிமேல் அணிந்து, என்
உளமே புகுந்த அதனால்
கொதி உறு காலன், அங்கி, நமனோடு தூதர்
கொடு நோய்கள் ஆனபலவும்
அதிகுணம் நல்ல நல்ல; அவை நல்ல நல்ல,
அடியார் அவர்க்கு மிகவே. 4

நஞ்சு அணி கண்டன், எந்தை, மடவாள்தனோடும்
விடை ஏறும், நங்கள் பரமன்,
துஞ்சு இருள், வன்னி, கொன்றை முடிமேல் அணிந்து என்
உளமே புகுந்த அதனால்
வெஞ்சின அவுணரோடும், உரும், இடியும், மின்னும்
மிகையான பூதம் அவையும்,
அஞ்சிடும், நல்ல நல்ல; அவை நல்ல நல்ல,
அடியார் அவர்க்கு மிகவே. 5

வாள்வரி அதள்அது ஆடைவரி கோவணத்தர்
மடவாள்தனோடும் உடன்ஆய்,
நாள்மலர் வன்னி கொன்றை நதிசூடி வந்து, என்
உளமே புகுந்த அதனால்,
கோள்அரி, உழுவையோடு, கொலையானை கேழல்,

www.saivamonline.com

கொடு நாகமோடு, கரடி,
ஆள் அரி, நல்ல நல்ல; அவை நல்ல நல்ல,
அடியார் அவர்க்கு மிகவே. 6

செப்பு இளமுலை நல்மங்கை ஒருபாகமாக
விடைஏறு செல்வன் அடைவார்
ஒப்புஇள மதியும் அப்பும் முடிமேல் அணிந்து என்
உளமே புகுந்த அதனால்
வெப்போடு, குளிரும் வாதம், மிகையான பித்தும்,
வினையான வந்து நலியா,
அப்படி நல்ல நல்ல; அவை நல்ல நல்ல,
அடியார் அவர்க்கு மிகவே. 7

வேள்பட விழிசெய்து அன்று, விடைமேல் இருந்து
மடவாள்தனோடும் உடனாய்,
வாள்மதி வன்னி கொன்றை மலர்சூடி வந்து, என்
உளமே புகுந்த அதனால்
ஏழ்கடல் சூழ் இலங்கை அரையன் தனோடும்
இடர்ஆன வந்து நலியா;
ஆழ்கடல் நல்ல நல்ல; அவை நல்ல நல்ல,
அடியார் அவர்க்கு மிகவே. 8

பலபல வேடம் ஆகும்பரன், நாரிபாகன்,
பசு ஏறும் எங்கள் பரமன்,
சலமகளோடு எருக்கு முடிமேல் அணிந்து என்
உளமே புகுந்த அதனால்,
மலர்மிசை யோனும் மாலும் மறையோடு தேவர்
வருகாலம் ஆன பலவும்
அலைகடல், மேரு நல்ல; அவை நல்ல நல்ல,
அடியார் அவர்க்கு மிகவே. 9

கொத்து அலர் குழலியோடு விசயற்கு நல்கு
குணம் ஆய வேட விகிர்தன்,
மத்தமும் மதியும் நாகம் முடிமேல் அணிந்து, என்
உளமே புகுந்த அதனால்,

www.saivamonline.com

புத்தரொடு அமணை வாதில் அழிவிக்கும் அண்ணல்
திருநீறு செம்மை திடமே
அத்தகு நல்ல நல்ல; அவை நல்ல நல்ல,
அடியார் அவர்க்கு மிகவே. 10

தேன் அமர் பொழில்கொள் ஆலை விளை செந்நெல்துன்னி,
வளர் செம்பொன் எங்கும் நிகழ,
நான்முகன் ஆதி ஆய பிரமா புரத்து
மறைஞான ஞான முனிவன்,
தான் உறு கோளும் நாளும் அடியாரை வந்து
நலியாத வண்ணம் உரை செய்
ஆனசொல் மாலை ஓதும் அடியார்கள் வானில்
அரசு ஆள்வர், ஆணை நமதே. 11

திருச்சிற்றம்பலம்

www.saivamonline.com

## 25. நவகோள்களுள் ஒன்றாகிய சனியின் பார்வையால் வரும் அனைத்துத் துன்பங்களும் நீங்க ஓத வேண்டிய பதிகம்

நளன் வழிபட்டுச் சனியின் பிடியிலிருந்து விடுபட்ட தலம் திருநள்ளாறு. அங்கே சென்று சிவனை வழிபட்டு இப்பதிகத்தைப் பாராயணம் செய்தால் சனிதோஷம் நீங்கும்.

ஆசிரியர் : திருஞானசம்பந்தர்
பண் : பழந்தக்கராகம்
இராகம் : ஆரபி
தலம் : திருநள்ளாறு

திருச்சிற்றம்பலம்

போகம் ஆர்த்த பூண்முலையாள் தன்னோடும் பொன்னகலம்
பாகம் ஆர்த்த பைங்கண் வெள்ஏற்று அண்ணல், பரமேட்டி,
ஆகம் ஆர்த்த தோல்உடையன், கோவண ஆடையின் மேல்
நாகம் ஆர்த்த நம்பெருமான், மேயது நள்ளாறே. 1

தோடுடைய காதுஉடையன், தோல்உடையன், தொலையாப்
பீடுடைய போர்விடையன் பெண்ணும் ஓர் பாலுடையன்
ஏடுடைய மேல் உலகோடு ஏழ்கடலும் சூழ்ந்த
நாடுடைய நம்பெருமான், மேயது நள்ளாறே. 2

ஆன்முறையால் ஆற்ற வெண்ணீறுஆடி, அணியிழைஓர்
பால்முறையால் வைத்த பாதம் பத்தர் பணிந்தேத்த
மான்மறியும் வெண்மழுவும் சூலமும் பற்றிய கை
நால்மறையான், நம்பெருமான், மேயது நள்ளாறே. 3

www.saivamonline.com

புல்க வல்ல வார்சடைமேல் பூம்புனல் பெய்து, அயலே
மல்க வல்ல கொன்றைமாலை மதியோடு உடன்சூடி,
பல்க வல்ல தொண்டர்தம் பொற்பாத நிழல்சேர,
நல்கவல்ல நம்பெருமான் மேயது நள்ளாறே. 4

ஏறுதாங்கி ஊர்திபேணி, ஏர்கொள் இளமதியம்
ஆறுதாங்கும் சென்னிமேல் ஓர் ஆடு அரவம்சூடி
நீறுதாங்கி நூல்கிடந்த மார்பில்நிரை கொன்றை
நாறுதாங்கும் நம்பெருமான் மேயது நள்ளாறே. 5

திங்கள் உச்சிமேல் விளங்கும் தேவன், இமையோர்கள்
எங்கள் உச்சி, எம்இறைவன் என்று அடியே இறைஞ்சு,
தங்கள் உச்சியால் வணங்கும் தன் அடியார்கட்கு எல்லாம்
நங்கள் உச்சி நம்பெருமான், மேயது நள்ளாறே. 6

வெஞ்சுடர்த்தீ அங்கை ஏந்தி, விண்கொள் முழவுஅதிர,
அஞ்சுஇடத்து ஓர் ஆடல் பாடல் பேணுவது அன்றியும் போய்ச்,
செஞ்சடைக்கு ஓர் திங்கள் சூடி திகழ்தருகண்டத் துள்ளே
நஞ்சு அடைத்த நம்பெருமான், மேயது நள்ளாறே. 7

சிட்டம் ஆர்ந்த மும்மதிலும் சிலைவரைத்தீ அம்பினால்
சுட்டு மாட்டிச், சுண்ணவெண் நீறுஆடுவது அன்றியும், போய்ப்
பட்டம் ஆர்ந்த சென்னிமேல் ஓர் பாடல் மதியம்சூடி,
நட்டம்ஆடும் நம்பெருமான் மேயது நள்ளாறே. 8

உண்ணல் ஆகா நஞ்சு கண்டத்து உண்டு, உடனே ஒடுக்கி
அண்ணல்ஆகா அண்ணல் நீழல் ஆர் அழல் போல் உருவம்
எண்ணல்ஆகா உள்வினை என்று எள்க வலித்து இருவர்
நண்ணல்ஆகா நம்பெருமான், மேயது நள்ளாறே. 9

மாசுமெய்யர், மண்டைத்தேரர், குண்டர் குணமிலிகள்
பேசும்பேச்சை மெய்என்று எண்ணி, அந்நெறி செல்லன்மின்,
முசுவண்டார் கொன்றைசூடி, மும்மதிலும் உடனே
நாசம்செய்த நம்பெருமான்; மேயது நள்ளாறே. 10

www.saivamonline.com

தண்புனலும் வெண்பிறையும் தாங்கிய தாழ்சடையன்,
நண்புநல்லார் மல்குகாழி ஞானசம்பந்தன், நல்ல
பண்புநள்ளாறு ஏத்துபாடல் பத்தும் இவைவல்லார்
உண்புநீங்கி, வானவரோடு உலகில் உறைவாரே. 11

திருச்சிற்றம்பலம்

www.saivamonline.com

## 26. வஞ்சகர் விரித்த வலையிலிருந்து பிழைக்கவும், பகைவர் எண்ணம் தோல்வியுறவும், சிவன் அருள், அரண் என நின்று நம்மைக் காக்கவும் ஓத வேண்டிய பதிகம்

திருநாவுக்கரசர் இப்பதிகம் ஓதி நீற்றறையிலிருந்து உய்ந்து வாழ்ந்தார்.

ஆசிரியர் : திருநாவுக்கரசர் - பொதுப்பதிகம்,
தனித் திருக்குறுந்தொகை
மாயாமாளவ கௌளை

திருச்சிற்றம்பலம்

மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே. 1

நமச்சி வாயவே ஞானமுங் கல்வியும்
நமச்சி வாயவே நானறி விச்சையும்
நமச்சி வாயவே நாநவின் றேத்துமே
நமச்சி வாயவே நன்னெறி காட்டுமே. 2

ஆளா காராளா னாரை அடைந்துய்யார்
மீளா ஆட்செய்து மெய்ம்மையுள் நிற்கிலார்
தோளா தசுரை யோதொழும் பர்செவி
வாளா மாய்ந்துமண் ணாகிக் கழிவரே. 3

நடலை வாழ்வுகொண் டென்செய்திர் நாணிலீர்
சுடலை சேர்வது சொற்பிர மாணமே
கடலின் நஞ்சமு துண்டவர் கைவிட்டால்
உடலி னார்கிடந் தூர்முனி பண்டமே. 4

www.saivamonline.com

பூக்கைக் கொண்டரன் பொன்னடி போற்றிலார்
நாக்கைக் கொண்டரன் நாமம் நவில்கிலார்
ஆக்கைக் கேஇரை தேடி அலமந்து
காக்கைக் கேஇரை ஆகிக் கழிவரே. 5

குறிக ளும்மடை யாளமுங் கோயிலும்
நெறிக ளும்மவர் நின்றதொர் நேர்மையும்
அறிய ஆயிரம் ஆரணம் ஓதிலும்
பொறியி லீர்மன மென்கொல் புகாததே. 6

வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும்
தாழ்த்தச் சென்னியுந் தந்த தலைவனைச்
சூழ்த்த மாமலர் தூவித் துதியாதே
வீழ்த்த வாவினை யேன்நெடுங் காலமே. 7

எழுது பாவைநல் லார்திறம் விட்டுநான்
தொழுது போற்றிநின் றேனையுஞ் சூழ்ந்து கொண்டு
உழுத சால்வழி யேஉழு வான் பொருட்டு
இழுதை நெஞ்சமி தென்படு கின்றதே. 8

நெக்கு நெக்கு நினைபவர் நெஞ்சுளே
புக்கு நிற்கும்பொன் னார்சடைப் புண்ணியன்
பொக்க மிக்கவர் பூவுநீ ருங்கண்டு
நக்கு நிற்பர் அவர் தம்மை நாணியே. 9

விறகில் தீயினன் பாலிற் படுநெய் போல்
மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்
உறவு கோல்நட் டுணர்வுக் கயிற்றினால்
முறுக வாங்கிக் கடையமுன் நிற்குமே. 10

திருச்சிற்றம்பலம்

www.saivamonline.com

## 27. நம் பகைவர்கள் வஞ்சகமாக நம் மேல் ஏவிய துன்பங்களிலிருந்து விடுபடவும், ஏவியவர்களையே துன்பம் சென்று அடையுமாறு செய்யவும் ஓத வேண்டிய பதிகம்

கூன் பாண்டியன் ஏவலால் சமணர்கள் மதுரையில் திருஞானசம்பந்தரும் சிவனடியார்களும் தங்கியிருந்த திருமடத்திற்குத் தீ வைத்தனர். அத்தீயை ஏவியவன் மேல் சென்று சேருமாறு திருஞானசம்பந்தர் பாடியது.

ஆசிரியர் : திருஞானசம்பந்தர்
பண் : கௌசிகம்
இராகம் : பயிரவி
தலம் : ஆலவாய் (மதுரை)

திருச்சிற்றம்பலம்

செய்யனே, திரு ஆலவாய் மேவிய
ஐயனே, அஞ்சல் என்று அருள்செய்; எனைப்
பொய்யராம் அமணர் கொளுவும் சுடர்,
பையவே சென்று, பாண்டியற்கு ஆகவே. 1

சித்தனே, திரு ஆலவாய் மேவிய
அத்தனே, 'அஞ்சல்' என்று அருள்செய்; எனை
எத்தராம் அமணர் கொளுவும் சுடர்
பத்திமன், தென்னன், பாண்டியற்கு ஆகவே. 2

தக்கன் வேள்வி தகர்த்து அருள் ஆலவாய்ச்
சொக்கனே, 'அஞ்சல்' என்று அருள்செய்; எனை
எக்கராம் அமணர் கொளுவும் சுடர்
பக்கமே சென்று, பாண்டியற்கு ஆகவே. 3

www.saivamonline.com

சிட்டனே, திரு ஆலவாய் மேவிய
அட்ட மூர்த்தியனே, 'அஞ்சல்' என்று அருள்;
துட்டர் ஆம் அமணர் கொளுவும் சுடர்,
பட்டிமன், தென்னன் பாண்டியற்கு ஆகவே. 4

நண்ணலார் புரம் மூன்று எரி ஆலவாய்
அண்ணலே, 'அஞ்சல்' என்று அருள்செய்; எனை
எண் இலா அமணர் கொளுவும் சுடர்
பண் இயல் தமிழ்ப் பாண்டியற்கு ஆகவே. 5

'தஞ்சம்' என்று உன் சரண் புகுந்தேனையும்
'அஞ்சல்' என்று அருள், ஆலவாய் அண்ணலே
வஞ்சம் செய்து அமணர் கொளுவும் சுடர்
பஞ்சவன் தென்னன் பாண்டியற்கு ஆகவே. 6

செங்கண் வெள்விடையாய், திரு ஆலவாய்
அங்கணா, 'அஞ்சல்' என்று அருள் செய்; எனை
கங்குலார் அமண்கையர் இடும் கனல்,
பங்கம் இல் தென்னன், பாண்டியற்கு ஆகவே. 7

தூர்த்தன் வீரன் தொலைத்து அருள் ஆலவாய்
ஆத்தனே, 'அஞ்சல்' என்று அருள் செய், எனை
ஏத்திலா அமணர் கொளுவும் சுடர்,
பாத்திவன் தென்னன், பாண்டியற்கு ஆகவே. 8

தாவினான் அயன் தான் அறியா வகை
மேவினாய் திரு ஆலவாயாய், அருள்;
தூவிலா அமணர் கொளுவும் சுடர்
பாவினான் தென்னன், பாண்டியற்கு ஆகவே. 9

எண்திசைக்கு எழில் ஆலவாய் மேவிய
அண்டனே, 'அஞ்சல்' என்று அருள்செய்; எனை
குண்டர் ஆம் அமணர் கொளுவும் சுடர்,
பண்டி மன் தென்னன், பாண்டியற்கு ஆகவே. 10

www.saivamonline.com

அப்பன், ஆலவாய் ஆதி, அருளினால்
வெப்பம் தென்னவன் மேல் உற, மேதினிக்கு
ஒப்ப, ஞானசம்பந்தன் உரை பத்தும்
செப்ப வல்லவர், தீது இலாச் செல்வரே. 11

திருச்சிற்றம்பலம்

www.saivamonline.com

## 28. போட்ட முதலுக்கு இசைந்த இலாபம் வராத போதும், உழைப்புக்கு ஏற்ற ஊதியம் கிடைக்காத நேரத்திலும், கடும் முயற்சிக்குப் பிறகும் வாழ்க்கைத் தரம் உயராதவிடத்தும் ஓத வேண்டிய பதிகம்

திருவீழிமிழலையில் இப்பதிகம் ஓதித் திருஞானசம்பந்தர் மாற்றுக் குறைந்த பொற்காசை, மாற்று உயர்ந்ததாகப் பெற்றார்.

ஆசிரியர் : திருஞானசம்பந்தர்
பணி : குறிஞ்சி
இராகம் : அரிகாம்போதி
தலம் : திருவீழிமிழலை

திருச்சிற்றம்பலம்

வாசி தீரவே, காசு நல்குவீர்;
மாசு இல் மிழலையீர்; ஏசல் இல்லையே. 1

இறைவர் ஆயினீர்; மறைகொள் மிழலையீர்;
கறைகொள் காசினை, முறைமை நல்குமே. 2

செய்ய மேனியீர்; மெய்கொள் மிழலையீர்;
பைகொள் அரவினீர்; உய்ய நல்குமே. 3

நீறு பூசினீர்; ஏறு அது ஏறினீர்;
கூறு மிழலையீர்; பேறும் அருளுமே. 4

காமன் வேவ, ஓர் தூமக் கண்ணினீர்;
நாம மிழலையீர்; சேமம் நல்குவே. 5

பிணிகொள் சடையினீர்; மணிகொள் மிடறினீர்;
அணிகொள் மிழலையீர்; பணிகொண்டு அருளுமே. 6

www.saivamonline.com

மங்கை பங்கினீர்; துங்க மிழலையீர்;
கங்கை முடியினீர்; சங்கை தவிர்மினே. 7

அரக்கன் நெரிதர, இரக்கம் எய்தினீர்;
பரக்கும் மிழலையீர், கரக்கை தவிர்மினே. 8

அயனும் மாலுமாய் முயலும் முடியினீர்;
இயலும் மிழலையீர்; பயனும் அருளுமே. 9

பறிகொள் தலையினார், அறிவது அறிகிலார்;
வெறிகொள் மிழலையீர்; பிரிவது அரியதே. 10

காழிமா நகர் வாழி சம்பந்தன்,
வீழிமிழலை மேல், தாழும் மொழிகளே. 11

திருச்சிற்றம்பலம்

www.saivamonline.com

## 29. நேர்மையான பாதையில் முயலும்போது எதிர்ப்படும் தடைகளைத் தகர்த்து முன்னேறவும், பொய்யான காரணங்களைக் கூறி நம் வளர்ச்சியைப் பகைவர் தடுக்க முயலும்போதும், வாழ்வில் எதிர்ப்படும் முட்டுக்கட்டைகளை அகற்றி வெற்றி பெறவும் ஓத வேண்டிய பதிகம்

ஆசிரியர் : திருஞானசம்பந்தர்
தலம் : திருமறைக்காடு
திருக்குறுந்தொகை : மாயாமாளவ கௌளை

திருச்சிற்றம்பலம்

பண்ணின் நேர்மொழி யாளுமை பங்கரோ
மண்ணி னார்வலஞ் செய்ம்மறைக் காடரோ
கண்ணி னாலுமைக் காணக் கதவினைத்
திண்ண மாகத் திறந்தருள் செய்ம்மினே. 1

ஈண்டு செஞ்சடை யாகத்துள் ஈசரோ
மூண்ட கார்முகி லின்முறிக் கண்டரோ
ஆண்டு கொண்டநீ ரேஅருள் செய்திடும்
நீண்ட மாக்கத வின்வலி நீக்குமே. 2

அட்ட மூர்த்திய தாகிய அப்பரோ
துட்டர் வான்புரஞ் சுட்ட சுவண்டரோ
பட்டங் கட்டிய சென்னிப் பரமரோ
சட்ட இக்கத வந்திறப் பிம்மினே. 3

அரிய நான்மறை யோதிய நாவரோ
பெரிய வான்புரஞ் சுட்ட சுவண்டரோ
விரிகொள் கோவண ஆடை விருத்தரோ
பெரிய வான்கத வம்பிரி விக்கவே. 4

www.saivamonline.com

மலையில் நீடிருக் கும்மறைக் காடரோ
கலைகள் வந்திறைஞ் சுங்கழல் ஏத்தரோ
விலையில் மாமணி வண்ண வுருவரோ
தொலைவி லாக்கத வந்துணை நீக்குமே. 5

பூக்குந் தாழை புறணி அருகெலாம்
ஆக்குந் தண்பொழில் சூழ்மறைக் காடரோ
ஆர்க்குங் காண்பரி யீர்அடி கேள்உமை
நோக்கிக் காணக் கதவைத் திறவுமே. 6

வெந்த வெண்பொடிப் பூசும் விகிர் தரோ
அந்த மில்லி அணிமறைக் காடரோ
எந்தை நீஅடி யார்வந் திறைஞ்சிட
இந்த மாக்கத வம்பிணி நீக்குமே. 7

ஆறு சூடும் அணிமறைக் காடரோ
கூறு மாதுமைக் கீந்த குழகரோ
ஏற தேறிய எம்பெரு மான்இந்த
மாறி லாக்கத வம்வலி நீக்குமே. 8

சுண்ண வெண்பொடிப் பூசுஞ் சுவண்டரோ
பண்ணி யேறுகந் தேறும் பரமரோ
அண்ண லாதிஅ ணிமறைக் காடரோ
திண்ண மாக்கத வந்திறப் பிம்மினே. 9

விண்ணு ளார்விரும் பியெதிர் கொள்ளவே
மண்ணு ளார்வணங் கும்மறைக் காடரோ
கண்ணி னாலுமைக் காணக் கதவினைத்
திண்ண மாகத் திறந்தருள் செய்ம்மினே. 10

அரக்க னைவிர லால்அடர்த் திட்டநீர்
இரக்க மொன்றிலீர் எம்பெரு மானிரே
சுரக்கும் புன்னைகள் சூழ்மறைக் காடரோ
சரக்க இக்கத வந்திறப் பிம்மினே. 11

திருச்சிற்றம்பலம்

www.saivamonline.com

## 30. கொடுத்த இடத்திலிருந்து பணம் திரும்பக் கிடைப்பதில் தாமதம் ஏற்படும்போதும், நம்பியவர்களால் ஏமாற்றம் ஏற்பட்டு விடுமோ என்ற பயம் வரும்போதும் ஓத வேண்டிய பதிகம்

சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருமுதுகுன்றத்தில் மணி முத்தாற்றில் இட்ட 12 ஆயிரம் பொன் திருவாரூர்க் குளத்தில் கிடைக்கத் தாமதம் ஏற்பட்டபோது திருவாரூரிலிருந்து திருமுதுகுன்றத்து இறைவனை உருகிப்பாடிப் பொன் பெற்றது.

ஆசிரியர் : சுந்தரமூர்த்தி சுவாமிகள்
பண் : நட்டராகம்
இராகம் : பந்துவராளி
தலம் : திருமுதுகுன்றம்

திருச்சிற்றம்பலம்

பொன்செய்த மேனியினீர்,
புலித்தோலை அரைக்கு அசைத்தீர்;
முன்செய்த மூஎயிலும் எரித்தீர்;
முதுகுன்று அமர்ந்தீர்;
மின்செய்த நுண்இடையாள் பரவை
இவள்தன் முகப்பே,
என்செய்தவாறு அடிகேள்,
அடியேன் இட்டளம் கெடவே. 1

உம்பரும் வானவரும் உடனே நிற்கவே, எனக்குச்
செம்பொனைத் தந்தருளித், திகழும் முதுகுன்று அமர்ந்தீர்;
வம்பு அமரும் குழலாள் பரவைஇவள் வாடுகின்றாள்;
எம்பெருமான், அருளீர்; அடியேன் இட்டளம் கெடவே. 2

www.saivamonline.com

பத்தா, பத்தர்களுக்கு அருள்செய்யும் பரம்பரனே,
முத்தா, முக்கணனே, முதுகுன்றம் அமர்ந்தவனே,
மைத்து ஆரும்தடங்கண் பரவைஇவள் வாடாமே,
அத்தா, தந்தருளாய், அடியேன் இட்டளம் கெடவே. 3

மங்கை ஓர்கூறு அமர்ந்தீர்
மறைநான்கும் விரித்து உகந்தீர்;
திங்கள் சடைக்கு அணிந்தீர்;
திகழும் முதுகுன்றமர்ந்தீர்;
கொங்கை நல்லாள் பரவை,
குணங்கொண்டிருந்தான் முகப்பே,
அங்கணனே, அருளாய்,
அடியேன் இட்டளம் கெடவே. 4

மையாரும் மிடற்றாய், மருவார் புரம்மூன்று எரித்த
செய்யார் மேனியனே, திகழும் முதுகுன்று அமர்ந்தாய்;
பைஆரும் அரவுஏர் அல்குலாள் இவள் வாடுகின்றாள்;
ஐயா தந்தருளாய், அடியேன் இட்டளம் கெட்டவே. 5

நெடியான் நான்முகனும் இரவியொடும் இந்திரனும்
முடியால் வந்துஇறைஞ்ச, முதுகுன்றம் அமர்ந்தவனே,
படிஆரும் இயலாள் பரவைஇவள்தன் முகப்பே,
அடிகேள், தந்தருளீர், அடியேன் இட்டளம் கெட்டவே. 6

கொந்தணவும் பொழில்சூழ் குளிர்மாமதில் மாளிகைமேல்
வந்தணவும் மதிசேர், சடைமாமுது குன்று உடையாய்
பந்தணவும் விரலாள் பரவைஇவள் தன் முகப்பே,
அந்தணனே, அருளாய், அடியேன் இட்டளம் கெட்டவே. 7

பரசுஆரும் கரவா, பதினெண் கணமும்சூழ
முரசார்வந்து அதிர, முதுகுன்றம் அமர்ந்தவனே,
விரைசேரும் குழலாள், பரவைஇவள் தன்முகப்பே
அரசே தந்தருள்வாய், அடியேன் இட்டளம் கெட்டவே. 8

www.saivamonline.com

ஏத்தாது இருந்து அறியேன்; மையோர்தனி நாயகனே;
மூத்தாய், உலகுக்கு எல்லாம்; முதுகுன்றம் அமர்ந்தவனே
பூத்தாரும் குழலாள் பரவை இவள்தன் முகப்பே,
கூத்தா, தந்தருளாய், கொடியேன் இட்டளம் கெட்டவே. 9

பிறைஆரும் சடைஎம்பெருமான், 'அருளாய்' என்று
முறையாய்வந்து அமரர் வணங்கும் முதுகுன்றர் தம்மை
மறையார்தம் குரிசில், வயல்நாவல் ஆரூரன், சொன்ன,
இறையார் பாடல் வல்லார்க்கு எளிதுஆம்
சிவலோகம்அதே 10

திருச்சிற்றம்பலம்

www.saivamonline.com

## 31. உற்றார் உறவினர் பகைத்து ஒதுக்கும்போதும், நெஞ்சத்தில் இனம் புரியாத அச்சம் நிலவும்போதும், அத்தன் அருள்பெற நெஞ்சுருகி ஓத வேண்டிய பதிகம்

ஆசிரியர் : திருநாவுக்கரசர்
தலம் : திருப்பாதிரிப்புலியூர்
திருவிருத்தம் : பைரவி

திருச்சிற்றம்பலம்

ஈன்றாளு மாயெனக் கெந்தையு மாயுடன் தோன்றினராய்
மூன்றாயுலகம் படைத்துகந் தான்மனத் துள்ளிருக்க
ஏன்றான் இமையவர்க் கன்பன் திருப்பா திரிப்புலியூர்த்
தோன்றாத்துணையா யிருந்தனன் தன்னடி
யோங்க ளுக்கே. 1

பற்றாய் நினைந்திடப் போதுநெஞ் சேஇந்தப்பாரை முற்றும்
சுற்றாய் அலைகடல் மூடினுங் கண்டேன் புகல் நமக்கு
உற்றான் உமையவட் கன்பன் திருப்பா திரிப்புலியூர்
முற்றா முளை மதிக்கண்ணியி னான்றன் மொய்கழலே. 2

விடையான் விரும்பியென் னுள்ளத் திருந்தான் இனிநமக்கிங்
கடையா அவலம் அருவினை சாரா நமனையஞ்சோம்
புடையார் கமலத் தயன்போல் பவர்பா திரிப்புலியூர்
உடையான் அடியார்அடியடி யோங்கட் கரியதுண்டே. 3

மாயமெல் லாமுற்ற விட்டிருள் நீங்க மலைமகட்கே
நேயம் நிலாவ இருந்தானவன்றன் திருவடிக்கே
தேயமெல்லாநின் றிறைஞ்சுந் திருப்பா திரிப்புலியூர்
மேயநல் லான் மலர்ப்பாதமென் சிந்தையுள் நின்றனவே. 4

www.saivamonline.com

வைத்த பொருள்நமக் காமென்று சொல்லி மனத்தடைத்துச்
சித்த மொருக்கிச் சிவாய நமஎன் றிருக்கினல்லால்
மொய்த்த கதிர்மதி போல்வா ரவர்பா திரிப்புலியூர்
அத்தன் அருள்பெற லாமோ அறிவிலாப் பேதைநெஞ்சே. 5

கருவாய்க் கிடந்துன் கழலே நினையுங் கருத்துடையேன்
உருவாய்த் தெரிந்துன்றன் நாமம் பயின்றேன் உனதருளால்
திருவாய் பொலியச் சிவாயநமவென்று நீறணிந்தேன்
தருவாய்சிவகதிநீபா திரிப்புலியூர் அரனே. 6

எண்ணா தமரர் இரக்கப் பரவையுள் நஞ்சமுண்டாய்
திண்ணார் அசுரர் திரிபுரந் தீயெழச் செற்றவனே
பண்ணார்ந் தமைந்த பொருள்கள் பயில்பா திரிப்புலியூர்க்
கண்ணார் நுதலாய் கழல்நங் கருத்தில் உடையனவே. 7

புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியா வுன்னடி யென்மனத்தே
வழுவாதிருக்க வரந்தர வேண்டும் இவ்வையகத்தே
தொழுவார்க்கிரங்கி யிருந்தருள் செய்பா திரிப்புலியூர்ச்
செழுநீர்ப் புனற்கங்கை செஞ்சடை மேல்வைத்த
தீவண்ணனே. 8

மண்பா தலம்புக்கு மால்கடல் முடிமற் றேழுலகும்
விண்பால் திசை கெட்டிருசுடர் விழினும் அஞ்சல் நெஞ்சே
திண்பால் நமக்கொன்று கண்டோம் திருப்பா திரிப்புலியூர்க்
கண்பாவு நெற்றிக் கடவுட் சுடரான் கழலிணையே. 9

திருந்தா அமணர்தந் தீநெறிப் பட்டுத்திகைத்துமுத்தி
தருந்தா ளிணைக்கே சரணம் புகுந்தேன் வரை யெடுத்த
பொருந்தா அரக்கன் உடல்நெரித் தாய்பா திரிப்புலியூர்
இருந்தாய்அடியேன் இனிப்பிறவாமல்வந்தேன்று கொள்ளே. 10

திருச்சிற்றம்பலம்

www.saivamonline.com

## 32. உற்றார் உறவினரை இழந்தும் அல்லது பிரிந்தும், தொலை தூரத்தில் தனிமையில் வாழும் சூழ்நிலையில் சிவனையே உற்ற துணையாகக் கொண்டு வாழும் பக்குவம் வாய்க்க ஓத வேண்டிய பதிகம்

ஆசிரியர் : சுந்தரமூர்த்தி சுவாமிகள்
பண் : நட்டராகம்
இராகம் : பந்துவராளி
தலம் : திருக்கடவூர்

திருச்சிற்றம்பலம்

பொடியார் மேனியனே
புரிநூல்ஒரு பாற்பொருந்த
வடியார் மூவிலைமேல்
வளர்கங்கையின் மங்கையொடும்
கடியார் கொன்றையனே
கடவூர்தனுள் வீரட்டத்தெம்
அடிகேள் என்அமுதே
எனக்கார் துணை நீயலதே. 1

பிறையா ருஞ்சடையாய்
பிரமன்தலை யிற்பலிகொள்
மறையார் வானவனே
மறையின்பொருள் ஆனவனே
கறையா ரும்மிடற்றாய்
கடவூர் தனுள்வீரட்டத் தெம்
இறைவா என்அமுதே
எனக்கார் துணைநீயலதே. 2

அன்றா லின்நிழற்கீழ்
அறம்நால்வர்க் கருள்புரிந்து

www.saivamonline.com

கொன்றாய் காலனுயிர்
கொடுத் தாய்மறை யோனுக்குமான்
கன்றா ருங்கரவா
கடவூர்த்திரு வீரட்டத்துள்
என்தாதை பெருமான்
எனக்கார் துணை நீயலதே. 3

போரா ருங்கரியின்
னுரிபோர்த்துப்பொன் மேனியின்மேல்
வாரா ரும்முலையாள்
ஒருபாகம் மகிழ்ந்தவனே
காரா ரும்மிடற்றாய்
கடவூர்தனுள் வீரட்டானத்
தாரா என்அமுதே
எனக்கார் துணை நீயலதே. 4

மையார் கண்டத்தினாய்
மதமாவுரி போர்த்தவனே
பொய்யா தென்உயிருட்
புகுந்தாயின்னம் போந்தறியாய்
கையார் ஆடரவா
கடவூர்தனுள் வீரட்டத்தெம்
ஐயா என்அமுதே
எனக்கார் துணை நீயலதே. 5

மண்நீர் தீவெளிகால்
வருபூதங்கள் ஆகிமற்றும்
பெண்ணோ டாணலியாய்ப்
பிறவாஉரு ஆனவனே
கண்ணா ரும்மணியே
கடவூர்தனுள் வீரட்டத்தெம்
அண்ணா என்அமுதே
எனக்கார் துணை நீயலதே. 6

எரியார் புன்சடைமேல்
இளநாகம் அணிந்தவனே

www.saivamonline.com

நரியா ருஞ்சுடலை
நகுவெண்டலை கொண்டவனே
கரியார் ஈர்உரியாய்
கடவூர்தனுள் வீரட்டத்தெம்
அரியாய் என் அமுதே
எனக்கார்துணை நீயலதே. 7

வேறா உன்னடியேன்
விளங்குங்குழைக் காதுடையாய்
தேறேன் உன்னையல்லாற்
சிவனேயென் செழுஞ்சுடரே
காறார் வெண்மருப்பா
கடவூர்த்திரு வீரட்டத்துள்
ஆறார் செஞ்சடையாய்
எனக்கார்துணை நீயலதே. 8

அயனோ டன்றரியும்
அடியும்முடி காண்பரிய
பயனே எம்பரனே
பரமாய பரஞ்சுடரே
கயமா ருஞ்சடையாய்
கடவூர்த்திரு வீரட்டத்துள்
அயனே என்அமுதே
எனக்கார் துணை நீயலதே. 9

காரா ரும்பொழில்சூழ்
கடவூர்த்திரு வீரட்டத்துள்
ஏரா ரும்மிறையைத்
துணையாஎழில் நாவலர்கோன்
ஆரூ ரன்னடியான்
அடித்தொண்டன் உரைத்தமிழ்
பாரோர் ஏத்தவல்லார்
பரலோகத் திருப்பாரே. 10

திருச்சிற்றம்பலம்

www.saivamonline.com

## 33. அறுபது ஆண்டுகள், எண்பது ஆண்டுகள், நூறு ஆண்டுகள் எமபயம் இல்லாது நீண்ட ஆயுள்பெற்று வாழ ஓத வேண்டிய பதிகம்

மார்க்கண்டேயர் மேல் வந்த எமனைக் காலால் உதைத்து வீழ்த்திய சிவன், இத்தலத்தில் கால சம்கார மூர்த்தியாகக் காட்சி தருகிறார். சஷ்டியப்த பூர்த்தி, சதாபிஷேகம் முதலியன இங்கே நிகழ்த்துவது விசேஷம்.

ஆசிரியர் : திருநாவுக்கரசர்
தலம் : திருக்கடவூர்
திருவிருத்தம் : பைரவி

திருச்சிற்றம்பலம்

மருட்டுயர் தீரஅன் றர்ச்சித்த மாணிமார்க் கண்டேயற்காய்
இருட்டிய மேனி வளைவாள் எயிற்றெரி போலுங் குஞ்சிச்
சுருட்டிய நாவில்வெங் கூற்றம் பதைப்ப வுதைத்துங்ஙனே
உருட்டிய சேவடி யான்கட வூருறைஉத்தமனே. 1

பதத்தெழு மந்திரம் அஞ்செழுத் தோதிப் பரிவினொடும்
இதத்தெழு மாணிதன் இன்னுயிர் உண்ண வெகுண்டடர்த்த
கதத்தெழு காலனைக் கண்குரு திப்புன லாறொழுக
உதைத்தெழு சேவடி யான்கட வூருறை உத்தமனே. 2

கரப்புறு சிந்தையர் காண்டற் கரியவன் காமனையும்
நெருப்புமிழ் கண்ணினன் நீள்புனற் கங்கையும் பொங்கரவும்
பரப்பிய செஞ்சடைப் பால்வண்ணன் காலனைப் பண்டொருகால்
உரப்பிய சேவடியான்கட வூருறைஉத்தமனே. 3

மறித்திகழ் கையினன் வானவர் கோனை மனமகிழ்ந்து
குறித்தெழு மாணிதன் ஆருயிர் கொள்வான் கொதித்த சிந்தைக்

www.saivamonline.com

கறுத்தெழு மூவிலை வேலுடைக் காலனைத் தானலற
உறுக்கிய சேவடி யான்கட வூருறை உத்தமனே. 4

குழைத்திகழ் காதினன் வானவர் கோனைக் குளிர்ந்தெழுந்து
பழக்கமொ டர்ச்சித்த மாணிதன் ஆருயிர் கொள்ளவந்த
தழற்பொதி மூவிலை வேலுடைக் காலனைத் தானலற
உழக்கிய சேவடி யான்கட வூருறை உத்தமனே. 5

பாலனுக் காயன்று பாற்கடல் ஈந்து பணைத்தெழுந்த
ஆலினிற் கீழிருந் தாரணம் ஓதி அருமுனிக்காய்ச்
சூலமும் பாசமுங் கொண்டு தொடர்ந்தடர்ந் தோடிவந்த
காலனைக் காய்ந்த பிரான்கட வூருறை உத்தமனே. 6

படர்சடைக் கொன்றையும் பன்னக மாலை பணிகளிறா
உடைதலை கோத்துழல் மேனியன் உண்பலிக் கென்றுழல்வோன்
சுடர்பொதி மூவிலை வேலுடைக் காலனைத் துண்ட மதா
உடறிய சேவடி யான்கட வூருறை உத்தமனே. 7

வெண்டலை மாலையுங் கங்கை கரோடி விரிசடைமேல்
பெண்தனி நாயகன் பேயுகந் தாடும் பெருந்தகையான்
கண்தனி நெற்றியன் காலனைக் காய்ந்த கடலின்விடம்
உண்டருள் செய்தபி ரான்கட வூருறை உத்தமனே. 8

கேழல தாகிக் கிளறிய கேசவன் காண்பரிதாய்
வாழிநன் மாமலர்க் கண்ணிடந் திட்டஅும் மாலவற்கன்று
ஆழியும் ஈந்து அடுதிறற் காலனை அன்றடர்ந்து
ஊழியும் ஆய பிரான்கட வூருறை உத்தமனே. 9

தேன்திகழ் கொன்றையுங் கூவிள மாலை திருமுடி மேல்
ஆன்திகழ் ஐந்துகந் தாடும் பிரான்மலை ஆர்த் தெடுத்த
கூன்திகழ் வாளரக் கன்முடி பத்துங் குலைந்து விழ
ஊன்றிவ சேவடி யான்கட வூருறை உத்தமனே. 10

திருச்சிற்றம்பலம்

www.saivamonline.com

## 34. மரணபயம் நீங்கவும், அகால மரணத்திலிருந்து விடுபடவும், நாகம் முதலிய விஷ ஜந்துக்களால் மரணம் வாராது பிழைக்கவும் நம்பிக்கையுடன் ஓத வேண்டிய பதிகம்.

அப்பூதி அடிகளின் மூத்தமகன் பாம்பின் விடத்தால் மாண்டபோது, திருநாவுக்கரசர் இப்பதிகம் பாடி உயிர்ப்பித்தார்.

ஆசிரியர் : திருநாவுக்கரசர்
பண் : இந்தளம்
இராகம் : மாயா மாளவ கௌளை
தலம் : திங்களூர் - திருப்பழனம்

திருச்சிற்றம்பலம்

ஒன்றுகொ லாமவர் சிந்தை யுயர்வரை
ஒன்றுகொ லாமுய ரும்மதி சூடுவர்
ஒன்றுகொ லாமிடு வெண்டலை கையது
ஒன்றுகொ லாமவர் ஊர்வது தானே. 1

இரண்டுகொ லாமிமை யோர்தொழு பாதம்
இரண்டுகொ லாமிலங் குங்குழை பெண்ணாண்
இரண்டுகொ லாமுரு வஞ்சிறு மான்மழு
இரண்டுகொ லாமவர் எய்தின தாமே. 2

மூன்றுகொ லாமவர் கண்ணுத லாவன
மூன்றுகொ லாமவர் சூலத்தின் மொய்யிலை
மூன்றுகொ லாங்கணை கையது வில்நாண்
மூன்றுகொ லாம்புர மெய்தன தாமே. 3

நாலுகொ லாமவர் தம்முக மாவன
நாலுகொ லாஞ்சன னம்முதற் தோற்றமும்

www.saivamonline.com

நாலுகொ லாமவர் ஊர்தியின் பாதங்கள்
நாலுகொ லாமவர் பாடின தாமே. 4

அஞ்சுகொ லாமவர் ஆடர வின்படம்
அஞ்சுகொ லாமவர் வெல்புல னாவன
அஞ்சுகொ லாமவர் காயப்பட் டான் கணை
அஞ்சுகொ லாமவர் ஆடின தாமே. 5

ஆறுகொ லாமவர் அங்கம் படைத்தன
ஆறுகொ லாமவர் தம்மக னார்முகம்
ஆறுகொ லாமவர் தார்மிசை வண்டின்கால்
ஆறுகொ லாஞ்சுவை யாக்கின தாமே. 6

ஏழுகொ லாமவர் ஊழி படைத்தன
ஏழுகொ லாமவர் கண்ட இருங்கடல்
ஏழுகொ லாமவர் ஆ ளுலகங்கள்
ஏழுகொ லாம்இசை யாக்கின தாமே. 7

எட்டுக்கொ லாமவர் ஈறில் பெருங்குணம்
எட்டுக்கொ லாமவர் சூடு மினமலர்
எட்டுக்கொ லாமவர் தோளிணை யாவன
எட்டுக்கொ லாந்திசை யாக்கின தாமே. 8

ஒன்பது போலவர் வாசல் வகுத்தன
ஒன்பது போலவர் மார்பினில் நூலிழை
ஒன்பது போலவர் போலக் குழற்சடை
ஒன்பது போலவர் பாரிடந் தானே. 9

பத்துக்கொ லாமவர் பாம்பின்கண் பாம்பின்பல்
பத்துக்கொ லாமெயி றுந்நெரித் துக்கன
பத்துக்கொ லாமவர் காயப்பட் டான்தலை
பத்துக்கொ லாமடி யார் செய்கை தானே. 10

திருச்சிற்றம்பலம்

www.saivamonline.com

## 35. முதுமையில் பாயில் படுத்துத் துன்புறாது, நோயில் கிடந்து துயர்உறாது, அமைதியாகச் சிவன்தாள்மலர்களில் கலந்து இன்புற ஓத வேண்டிய பதிகம்

ஆசிரியர் : திருநாவுக்கரசர்
தலம் : திருப்புகலூர்
திருத்தாண்டகம் : அரிகாம்போதி

திருச்சிற்றம்பலம்

எண்ணுகேன் என்சொல்லி எண்ணு கேனோ
எம்பெருமான் திருவடியே எண்ணின் அல்லால்
கண்ணிலேன் மற்றோர் களைகண் இல்லேன்
கழலடியே கைதொழுது காணின் அல்லால்
ஒண்ணுளே ஒன்பது வாசல் வைத்தாய்
ஒக்க அடைக்கும் போதுணர மாட்டேன்
புண்ணியா உன்னடிக்கே போதுகின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணி யனே. 1

அங்கமே பூண்டாய் அனலா டினாய் ஆதிரையாய்
ஆல் நிழலாய் ஆனே றூர்ந்தாய்
பங்கமொன் றில்லாத படர் சடையினாய்
பாம்பொடு திங்கள் பகைதீர்த் தாண்டாய்
சங்கையொன் றின்றியே தேவர்வேண்டச்
சமுத்திரத்தின் நஞ்சுண்டு சாவா மூவாச்
சிங்கமே உன்னடிக்கே போதுகின்றேன்
திருப்புகலூர் மேவிய தேவ தேவே. 2

பையரவக் கச்சையாய் பால்வெண் ணீற்றாய்
பளிக்குக் குழையினாய் பண்ணார் இன்சொல்
மைவிரவு கண்ணாளைப் பாகங் கொண்டாய்
மான்மறிகை ஏந்தினாய் வஞ்சக் கள்வர்

www.saivamonline.com

ஐவரையும் என்மேற் றரவ றுத்தாய்
அவர்வேண்டுங் காரியமிங் காவதில்லை
பொய்யுரையா துன்னடிக்கே போதுகின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணி யனே. 3

தெருளாதார் மூவெயிலுந் தீயில் வேவச்
சிலைவளைத்துச் செங்கணையாற் செற்ற தேவே
மருளாதார் தம்மனத்தில் வாட்டந்தீர்ப்பாய்
மருந்தாய்ப் பிணிதீர்ப்பாய் வானோர்க்கென்றும்
அருளாகி ஆதியாய் வேத மாகி
அலர்மேலான் நீர் மேலான் ஆய்ந்துங் காணாப்
பொருளாவாய் உன்னடிக்கே போதுகின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணி யனே. 4

நீரேறு செஞ்சடைமேல் நிலாவெண் திங்கள்
நீங்காமை வைத்துகந்த நீதியானே
பாரேறு படுதலையிற் பலி கொள்வானே
பண்டநங்கற் காய்ந்தானே பாவநாசா
காரேறு முகிலனைய கண்டத் தானே
கருங்கைக் களிற்றுரிவை கதறப் போர்த்த
போரேறே உன்னடிக்கே போதுகின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணி யனே. 5

விரிசடையாய் வேதியனே வேத கீதா
விரிபொழில் சூழ் வெண்காட்டாய் மீயச்சூராய்
திரிபுரங்கள் எரிசெய்த தேவ தேவே
திருவாரூர்த் திருமூலட் டானம் மேயாய்
மருவினியார் மனத்துளாய் மாகா ளத்தாய்
வலஞ்சுழி யாய்மா மறைக்காட் டெந்தா யென்றும்
புரிசடையாய் உன்னடிக்கே போது கின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணி யனே. 6

தேவார்ந்த தேவனைத் தேவ ரெல்லாந்
திருவடிமேல் அலரிட்டுத் தேடி நின்று
நாவார்ந்த மறைபாடி நட்டம்ஆடி

www.saivamonline.com

நான்முகனும் இந்திரனும் மாலும்
காவார்ந்த பொழிற்சோலைக் கானப்பேராய்
கழுக்குன்றத் துச்சியாய் கடவு ளேநின்
பூவார்ந்த பொன்னடிக்கே போதுகின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணி யனே. 7

நெய்யாடி நின்மலனே நீல கண்டா
நிறைவுடையாய் மறைவல்லாய் நீதியானே
மையாடு கண்மடவாள் பாகத்தானே
மான்தோல் உடையாய் மகிழ்ந்து நின்றாய்
கொய்யாடு கூவிளங் கொன்றை மாலை
கொண்டடியேன் நானிட்டுக் கூறிநின்று
பொய்யாத சேவடிக்கே போதுகின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணி யனே. 8

துன்னஞ்சேர் கோவணத்தாய் தூய நீற்றாய்
துதைந் திலங்கு வெண்மழுவாள் கையி லேந்தித்
தன்னனையுந் தண் மதியும் பாம்பும் நீருஞ்
சடைமுடிமேல் வைத்ததுகந்த தன்மை யானே
அன்னநடை மடவாள் பாகத் தானே
அக்காரம் பூண்டானே ஆதியானே
பொன்னங் கழலடிக்கே போதுகின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணி யனே. 9

ஒருவரையும் அல்லா துணரா துள்ளம்
உணர்ச்சித் தடு மாற்றத்துள்ளே நின்ற
இருவரையும் மூவரையும் என்மேல் ஏவி
இல்லாத தரவறுத்தாய்க் கில்லேன் ஏலக்
கருவரைசூழ் கானல் இலங்கைவேந்தன்
கடுந்தேர்மீ தோடாமைக்காலாற் செற்ற
பொருவரையாய் உன்னடிக்கே போதுகின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணி யனே. 10

திருச்சிற்றம்பலம்

www.saivamonline.com

## 36. மேன்மை கொள் சைவ நீதி உலகெலாம் நிலவவும், மழைவளம் சிறக்கவும், நல்லாட்சி மலரவும், சான்றோர் வாழ்வு பெறவும், தீமைகள் ஓடி ஒளியவும் ஓத வேண்டிய திருப்பாசுரப் பதிகம்

புனல் வாதத்தில் வையையின் நீரோட்டத்தில் எதிர் சென்று, சைவ சமயமே சமயம் என்பதை நிறுவத் திருஞானசம்பந்தர் மதுரையில் அருளிச்செய்தது.

ஆசிரியர் : திருஞானசம்பந்தர்
பண் : கௌசிகம்
இராகம் : பைரவி
தலம் : ஆலவாய் (மதுரை)

திருச்சிற்றம்பலம்

வாழ்க அந்தணர், வானவர் ஆண்இனம்;
வீழ்க தண்புனல்; வேந்தனும் ஓங்குக;
ஆழ்க தீயது எல்லாம் அரன் நாமமே
சூழ்க; வையகமும் துயர் தீர்கவே. 1

அரிய காட்சியராய்த் தமது அங்கை சேர்
எரியர்; ஏறு உகந்து ஏறுவர்; கண்டமும்
கரியர்; காடு உறை வாழ்க்கையர்; ஆயினும்
பெரியர்; ஆர் அறிவார் அவர் பெற்றியே? 2

வெந்த சாம்பல் விரை எனப் பூசியே,
தந்தையாரொடு தாய் இலர்; தம்மையே
சிந்தியா எழுவார் வினை தீர்ப்பர்; ஆல்
எந்தையார் அவர் எவ்வகையார் கொலோ? 3

www.saivamonline.com

ஆட்பாலவர்க்கு அருளும் வண்ணமும், ஆதிமாண்பும்
கேட்பான் புகில், அளவுஇல்லை; கிளக்க வேண்டா;
கோட்பாலனவும் வினையும் குறுகாமை, எந்தை
தாள்பால் வணங்கித் தலைநின்று இவை கேட்கதக்கார். 4

ஏதுக்களாலும் எடுத்த மொழியாலும் மிக்குச்
சோதிக்க வேண்டா; சுடர் விட்டுளன், எங்கள் சோதி;
மாதுக்கம் நீங்கல் உறுவீர்; மனம் பற்றி வாழ்மின்;
சாதுக்கள் மிக்கீர், இறையே வந்து சார்மின்களே. 5

ஆடும் எனவும் அருங்கூற்றம் உதைத்து வேதம்
பாடும் எனவும், புகழ் அல்லது பாவம் நீங்கக்
கேடும் பிறப்பும் அறுக்கும் எனக் கேட்டீர் ஆகில்
நாடும் திறத்தார்க்கு அருள் அல்லது நாட்டல்ஆமே? 6

கடிசேர்ந்த போது மலர் ஆன கைக்கொண்டு நல்ல
படிசோந்த பால் கொண்டு, அங்குஆட்டிட தாதைபண்டு
முடி சேர்ந்தகாலை அறவெட்டிட முக்கண் மூர்த்தி
அடிசேர்ந்த வண்ணம், அறிவார் சொலக்கேட்டும்
அன்றே. 7

வேத முதல்வன் முதலாக விளங்கி வையம்
ஏதப்படாமை உலகத்தவர் ஏத்தல் செய்யப்
பூதமுதல்வன் முதலே முதலாப் பொலிந்த
சூதன் ஒலிமாலை என்றே கலிக்கோவை சொல்லே. 8

பார் ஆழி வட்டம் பகையால் நலிந்து ஆட்ட, ஆடிப்
பேர் ஆழி ஆனது இடர்கண்டு, அருள்செய்தல் பேணி
நீர் ஆழி விட்டு ஏறி நெஞ்சுஇடம் கொண்டவர்க்குப்
போர் ஆழி ஈந்த புகழும், புகழ் உற்றது அன்றே. 9

மால் ஆயவனும் மறைவல்ல நான்முகனும்
பால்ஆய தேவர் பகரில், அமுது ஊட்டல் பேணி,
கால்ஆய முந்நீர் கடைந்தார்க்கு அரிதாய் எழுந்த
ஆலாலம் உண்டு, அங்கு அமரர்க்கு அருள்
செய்ததாமே. 10

www.saivamonline.com

அற்று அன்றி அம்தண் மதுரைத் தொகைஆக்கினாலும்
தெற்று என்று தெய்வம் தெளியார், கரைக்குஓலை
தெண்ணீர்ப்
பற்றுஇன்றிப் பாங்கு எதிர்வின் ஊரவும் பண்புநோக்கில்
பெற்றொன்று உயர்த்தபெருமான் பெருமானும் அன்றே. 11

நல்லார்கள் சேர் புகலி ஞானசம்பந்தன், நல்ல
எல்லார்களும் பரவும் ஈசனை ஏத்து பாடல்,
பல்லார்களும் மதிக்கப் பாசுரம் சொன்ன பத்தும்
வல்லார்கள், வானோர் உலகு ஆளவும் வல்லர் அன்றே. 12

திருச்சிற்றம்பலம்

www.saivamonline.com



www.saivamonline.com



www.saivamonline.com



www.saivamonline.com



www.saivamonline.com

# நம்பிக்கை ஊட்டும் திருமுறைத் தொடர்கள்

1. அல்லல் கெடுப்பன அஞ்செ ழுத்துமே
2. இம்மையே தரும் சோறும் கூறையும்
3. மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்
4. செய்வினை வந்து எமைத் தீண்டப் பெறா
5. பேணி அணிபவர்க்கு எல்லாம் பெருமை கொடுப்பது நீறு
6. நாதன் அடியாரை நலியா வினைகளே
7. எல்லாம் ஆம் எம்பெருமான் கழல் ஏத்துமே
8. அடியார்கள் வானில் அரசாள்வர் ஆணை நமதே
9. சிந்தும் வல்வினை செல்வமும் மல்குமால் நந்தி நாமம் நமச்சி வாயவே
10. வேண்டத் தக்கது அறிவோய் நீ வேண்ட முழுதும் தருவோய் நீ
11. எப்பரி சாயினும் ஏத்துமின் ஏத்தினால் அப்பரிசு ஈசன் அருள் பெறலாமே
12. ஆழ்க தீயது எல்லம் அரன் நாமமே சூழ்க வையகமும் துயர் தீர்கவே



திருஞானசம்பந்தர் திருநாவுக்கரசர் சுந்தரர் மாணிக்கவாசகர்

Lovely, Sivakasi
www.lovely-cards.com

www.saivamonline.com